# பகுதி II

பக்கம்

| | |
|---|---|
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | i |
| ஆளணி | Lii |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
| --- | --- |
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | i |
| நாணய வெளியீடு | ix |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | xi |
| வங்கி மேற்பார்வை | xiii |
| நிதிக் கூட்டு நிலையங்களின் மேற்பார்வை | xv |
| அபிவிருத்தி நிதி | xx |
| கிராமியக் கொடுகடன் | xxix |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | xxxi |
| கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | xxxv |
| ஊழியர் சேமநிதியம் | xxxvi |
| செலாவணிக் கட்டுப்பாடு | xxxviii |
| பொதுப் படுகடன் | xxxxii |
| பிரதேச அலுவலகங்கள்—மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை | xxxxiii |
| தகவலும் வெளியீடுகளும் | xxxxvii |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | xxxxviii |
| இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம் | xxxxix |
| முகாமைக் கணக்காய்வு | L |
| அளவீடுகளும் தரவுச் சேகரிப்பும் | L |
| பயிற்சி | Li |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

மத்திய வங்கியின் 1990 திசெம்பர் 28 ஆம் நாளன்று உள்ளவாறான ஐந்தொகையும் 1990 திசெம்பர் 28 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் இலாப நட்டக் கணக்குகளும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன. 1990 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 774,620 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டினைவிட 23.4 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. சொத்துக்கள் பக்கத்தில் வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகள் 60.8 சதவீதத்தினாலும், ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் 34.7 சதவீதத்தினாலும், உள்நாட்டுச் சொத்துக்கள் 11.2 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளன. உள்நாட்டுச் சொத்துக்களில் குறுங்கால முற்பணங்கள் 74.6 சதவீதங் கொண்ட ஆகக்கூடிய அதிகரிப்பினைப் பதிவு செய்தன. நிதி நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் 69.4 சதவீதத்தினாலும், நடுத்தர நீண்டகால கடன்கள் திட்டங்களின் கீழான மீள் நிதியிடல் கடன்கள் 61.9 சதவீதத்தினாலும், அரசிற்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் 46.9 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளன. ஆயினும் திறைசேரி உண்டியல்கள் மீதான மத்திய வங்கியின் முதலீடுகள் முன்னைய ஆண்டைவிட 7.2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், முன்னைய ஆண்டு இலாபங்களிலிருந்து ரூ.5,000 இலட்சம் மிகைக் கணக்கிற்கு மாற்றப்பட்டதன் காரணமாக மூலதனக் கணக்குகள் 467.3 சதவீத அதிகரிப்பைக் காட்டின. முக்கிய தனிப்பெரும் பொறுப்பு விடயமான சுற்றோட்டத்திலுள்ள நாணயம் முன்னைய ஆண்டினைவிட 13.1 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மத்திய வங்கியுடனான வைப்புக்கள் 46.8 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இதில் அரசின் வைப்புக்கள் 30.0 சதவீதத்தினாலும், அரச முகவர்கள், நிறுவனங்களின் வைப்புக்கள் 220.8 சதவீதத்தினாலும், வர்த்தக வங்கியின் வைப்புக்கள் 33.3 சதவீதத்தினாலும் பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் வைப்புக்கள் 73.5 சதவீதத்தினாலும் அதிகரித்தன. நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் 73.3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. (வங்கிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முக்கிய கூறுகளின் ஒப்பீடு அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது.)

1990 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வருவாய் ரூ. 77,270 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 11.3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. செலவு, ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கங்கள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கு, ஏனைய கட்டணங்கள் என்பவற்றிற்கு இடமளித்து நோக்குகையில் ஆய்விற்குரிய ஆண்டுக்கான வங்கியின் தேறிய இலாபம் ரூ. 7,500 இலட்சமாக விளங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன் நியதிகளின்படி வங்கியின் மிகைக்கு ரூ. 2,500 இலட்சம் மாற்றப்பட்டது. மிகுதியான ரூ. 5,000 இலட்சங் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசிற்குச் செலுத்தப்பட வேண்டும் எனக் குறித்தொதுக்கப்பட்டது.

# இலங்கை மத்திய

## 1990 ஆம் ஆண்டு

| 1989 திசெம்பர் 29 ரூபா | 1989 திசெம்பர் 29 ரூபா | பொறுப்புக்கள் | 1990 திசெம்பர் 28 ரூபா | 1990 திசெம்பர் 28 ரூபா |
|---|---|---|---|---|
| | | **மூலதன கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 92,000,000 | 107,000,000 | மிகை ... | 592,000,000 | 607,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 20,207,421,450 | | தாள்கள் ... | 22,869,022,916 | |
| 918,566,342 | 21,125,987,792 | குத்திகள் ... | 1,031,510,896 | 23,900,533,812 |
| | | **வைப்புக்கள்** | | |
| 2,764,709,352 | | அரசு ... | 3,593,301,872 | |
| 68,834,706 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ... | 220,749,507 | |
| 5,596,634,032 | | வர்த்தக வங்கிகள் ... | 7,457,546.061 | |
| 5,463,706,571 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 9,481,396,781 | |
| 174,878 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 16,787,750/– கொண்ட தொகை நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதி ... | 133,632 | |
| 695,077,765 | 14,589,137,304 | ஏனையவைகள் ... | 670,247,118 | 21,423,375,571 |
| | 2,631,958,214 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 999,397 |
| | 1,875,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | | 3,250,000,000 |
| | 220,000,000 | மூலதன உதவுதொகைக் கணக்குகள் ... | | 372,750,000 |
| | 22,221,401,356 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ... | | 27,907,282,093 |
| | 62,770,484,666 | | | 77,461,940,873 |

## 1990 திசெம்பர் 28 ஆம் நாள் முடிவுற்ற

| 1989 திசெம்பர் 29 ரூபா | 1989 திசெம்பர் 29 ரூபா | | 1990 திசெம்பர் 28 ரூபா | 1990 திசெம்பர் 28 ரூபா |
|---|---|---|---|---|
| | 5,939,397,126 | பொதுச் செலவுகளுக்கும்(சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 6,976,653,959 |
| | | **1990 திசெம்பர் 28இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம்** | | |
| 505,371 | | நாணய சீராக்கக் கணக்கிற்கு நாணய விதிச்சட்டத்தின் 39 (அ) பிரிவின் நியதிகளின்கீழ் தீர்ப்பனவு செய்யப்பட்ட நிலுவை | | |
| 500,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 250,000,000 | |
| 500,000,000 | 1,000,505,371 | நாணயவிதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 500,000,000 | 750,000,000 |
| | 6,939,902,497 | | | 7,726,653,959 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு:**

1990ஆம் ஆண்டு திசெம்பர் 28ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு–7.
1991, ஏப்பிறல் 15.

டபிள்யூ. காமினி ஏபா
கணக்காய்வாளர் நாயகம்

*அட்டவணை 2.1*

# வங்கியின் ஐந்தொகை

## திசெம்பர் 28ஆம் நாளில் உள்ளபடி

| 1989 திசெம்பர் 29 | | சொத்துக்கள் | 1990 திசெம்பர் 28 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 4,828,392,377 | | வெளிநாட்டில் உள்ள பணங்களும், நிலுவைகளும் | 8,460,710,058 | |
| 4,678,005,347 | | *வெளிநாட்டுப பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் | 7,533,610,210 | |
| 452,156,659 | 9,958,554,383 | சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகள் ... | 16,337,923 | 16,010,658,191 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 7,5[illegible]9,551,611 | | அரசிற்கு ... | 11,161,696,884 | |
| 1,572,145,018 | | ஏனையவற்றிற்கு—நடுத்தர, நீண்டகால ... | 2,545,258,079 | |
| 2,740,395,432 | | குறுங்கால ... | 4,785,005,960 | |
| 29,141,386,521 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 27,[illegible]44,307,233 | |
| 220,000,000 | 41,273,478,582 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் ... | 372,750,000 | 45‘909,018,156 |
| | 11,538,451,701 | ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ... | | 15,542,264,526 |
| | 62,770,484,666 | | | 77,461,940,873 |

*அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5.527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூபா 2,933,697/– ஆகவும், ரூபா 34,340/– ஆகவும் இருந்தன.)

## ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1989 திசெம்பர் 29 | | 1990 திசெம்பர் 28 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 6,939,902,497 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | 77,726,653,959 |
| 6,939,902,497 | | 77,726,653,959 |

**எச். என். எஸ். கருணாதிலக**
ஆளுநர்

**எம். பீ. திசாநாயக்கா**
முதனமைக் கணக்காளர்

அட்டவணை 2,2

## மத்திய வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய முக்கிய கூறுகளின் ஒப்பீடு 1989, 1990 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு

| பொறுப்புக்கள் | | | | | சொத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | 1989 | | 1990 | | விடயம் | 1989 | | 1990 | |
| | ரூ. ப. இ. | % | ரூ. ப. இ. | % | | ரூ. ப. இ | % | ரூ. ப. இ. | % |
| மூலதனக் கணக்கு .. | 107.0 | 0.2 | 607.0 | 0.1 | பன்னாட்டு ஒதுக்கு ... | 9,958.6 | 15.9 | 16,010.6 | 20.7 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ... | 21,126.0 | 33.7 | 23,900.5 | 30.9 | | | | | |
| வைப்புக்கள் ... | 14,589.1 | 23.2 | 21,423.3 | 27.6 | உள்நாட்டுச் சொத்துக்கள் ... | 41,273.5 | 65.7 | 45,909.0 | 59.2 |
| வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் .. | 2,632.0 | 4.2 | 1.0 | 27.6 | | | | | |
| நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் | 1,875.0 | 3.0 | 3,250.0 | 4.2 | ஏனைய சொத்துக்கள் .. | 11,538.4 | 18.4 | 15,542.3 | 20.1 |
| மூலதன உதவுதொகை க/கு ... | 220.0 | 0.3 | 372.3 | 0.5 | | | | | |
| ஏனைய பொறுப்புக்கள் .. | 22,221.4 | 35.4 | 27,907.3 | 36.6 | | | | | |
| மொத்தம் ... | 62,770.5 | 100.0 | 77,461.9 | 100.0 | மொத்தம் .. | 62,770.5 | 100.0 | 77,461.9 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடனான அதன் கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ.அ. டொலரின் நாளாந்த உடன் வாங்கும் விற்கும் வீதங்களைத் தொடர்ந்தும் தீர்மானித்து வந்தது. 1990 ஒகத்து 20 இல் இருந்து ஐ.அ. டொலருக்கான நாளாந்த செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதில் ஒரு புதிய முறையை வங்கி அறிமுகப்படுத்தியது. செலாவணித் தாராளமயமாக்கல் கொள்கையின் இன்னும் ஒருபடி முன்னேற்றகரமானதாக அமையும் இப்புதிய முறையின் கீழ் மத்திய வங்கி ஐக்கிய அமெரிக்க டொலருக்கான நாளாந்த செலாவணி வீதத்தினை அறிவிக்கையில் உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயங்களுக்குக் காணப்படும் நடைமுறைக் கேள்வி நிரம்பல் நிலைமைகள், வங்கித்தொழில் துறையில் காணப்படும் பொதுவான திரவத்தன்மை நிலை, வெளிநாட்டுச் செலாவணியின் குறுக்கு வீதங்களின் அசைவுகள் மற்றும் ஏனைய தொடர்புக் காரணிகள் ஆகியவற்றைக் கருத்திலெடுத்துக் கொள்ளும். ஐக்கிய அமெரிக்க டொலருக்கான உடன்வாங்கும், விற்கும் வீதங்களுக்கிடையிலான வேறுபாடு ஒவ்வொரு 100 ஐ.அ. டொலருக்கும் ரூ. 3.00 ஆக விளங்கியது.

முன்மாற்றுச் செலாவணி வீதத்தில் உறுதிப்பாட்டினைப் பேணும்பொருட்டு ஐ.அ. டொலர்களை முன்மாற்று விற்பனை செய்வதன்மூலம் வங்கி தேவைப்படும் வேளைகளில் முன்மாற்றுச் சந்தையில் தலையிட்டு வந்தது. வர்த்தக வங்கிகளிடமிருந்து ஐ.அ. டொலர்களை முன்மாற்று கொள்வனவு செய்வதற்காக வங்கி, சந்தையில் ஒழுங்கான முறையில் ஈடுபட்டிருந்தது. இந்தக் காப்புக்கான காலவரையறை ஆறு மாதங்கள் வரை விளங்கியது.

கடந்த காலத்தைப் போலவே மத்திய வங்கி அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பன்னாட்டுப் பண மற்றும் மூலதனச் சந்தைகளில் முதலீடு செய்தது.

## கொழும்பு சருவதேச விமானநிலையத்தில் தங்க விற்பனை

ஆய்விற்குரிய ஆண்டில் இலங்கை மத்திய வங்கி கொழும்பு சருவதேச விமான நிலையத்தில் இரண்டு தங்க விற்பனை நிலையங்களைத் திறந்தது. வெளியேறும், மாறிச் செல்லும் பயணிகள் தமக்குத் தேவையான தங்கத்தைக் கொள்வனவு செய்வதற்காக முதலாவது தங்க விற்பனை நிலையம் வெளியேறுதல்/மாறிச்செல்லல் கூடத்தில் யூனில் திறக்கப்பட்டது. இந்த விற்பனை நிலையத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தங்கத்தை மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவர முடியாது. இரண்டாவது தங்க விற்பனை நிலையம் 1990 ஒத்தோபரில் விமான நிலையத்தின் வருகைகள் கூடத்தில் திறக்கப்பட்டது. இலங்கைக் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் இந்த விற்பனை நிலையத்தில் தங்கத்தைப் பிரத்தியேகமாகக் கொள்வனவு செய்வதற்கான ஐ.அ. டொலர் 1,000 இனை ஆளொருவருக்கு ஆண்டொன்றிற்கு விசேட தீர்வையற்ற சலுகையாகப் பெற உரித்துடையவர்கள். மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்ட மாற்றக்கூடிய நாணயங்களில் மாத்திரமே இந்நிலையங்களில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

### ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

1990 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய வசதிகளினூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 162,090 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 114,420 இலட்சமாக விளங்கியது.

1990 இல் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 1989 இன் ரூ. 3,930 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 44,010 இலட்சமாக விளங்கியது.

1989 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பண்டமாற்று வசதி இவ்வாண்டும் தொடர்ந்து தொழிற்பாட்டிற்குரியதாக விளங்கியது. வங்கி இந்த வசதியினூடாக ரூ. 7,540 இலட்சங் கொண்ட தேறிய வசதியைப் பயன்படுத்தியது.

### வங்கி வீதம்

அரச உத்தரவாதப் பிணைகளையும், வர்த்தக மற்றும் உற்பத்திக் கடன்கள் தொடர்பான சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்களையும் பொறுப்பாக வைத்து வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 1990 யூலை 06 தொடக்கம் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

### குறுங்காலக் கொடுகடன்

ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டங்களின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் கடன் உதவி, இவ்வாண்டு முழுவதும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது. வகை I (மரபுவழி) வகை II (மரபுவழியல்லா)என்பவற்றின் ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடல் காலப்பகுதி தொடர்ந்தும் 90 நாட்களாகவே இருந்தது. எனினும் இரு வகைகளுக்கும் தனித்தனி விடயங்களின் அடிப்படையில் மேலும் 30 நாட்களைக் கொண்ட நீடிப்புக்கள் மொத்தமாக 120 நாட்கள் வரையில் வழங்கப்பட்டன. வகை I இன் கீழான ஏற்றுமதிக் கொடுகடன்களுக்கான மீள் நிதியிடல் தொடர்பான வட்டி வீதம் ஆண்டுக்கு 11 சதவீதமாகவும், கடன் வழங்கல் வீதம் ஆண்டிற்கு 14 சதவீதமாகவும் விளங்கின. வகை II இன் ஏற்றுமதிகள் தொடர்பான இவ் வீதங்கள் முறையே ஆண்டுக்கு 6 சதவீதமாகவும், 9.8 சதவீதமாகவும் இருந்தன. செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் விதிக்கப்படும் கால எல்லைக்குள் ஏற்றுமதிகளின் விற்பனைப் பணம் இலங்கையில் பெறப்படும் பட்சத்தில், கடன் வழங்கும் வங்கிகள் ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்ட வாடிக்கையாளர்களுக்கு நன்மையை மாற்றும் பொருட்டு வங்கி ஏற்றுமதி மீள் நிதியிடல் கடன்களின் மீது விதிக்கப்பட்ட வட்டியில் ஆண்டுக்கு 4 சதவீதப் புள்ளிகளை தொடர்ந்தும் மீளளிப்புச் செய்தது. அரசிற்காகத் தாங்கிருப்பினைப் பேணும் பொருட்டுக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனத்தினால் அரிசி மற்றும் கோதுமை மா/தானியம் என்பவற்றை இறக்குமதி செய்வதற்காக இலங்கை வங்கி மக்கள் வங்கி ஆகியவற்றிற்கு ஆண்டுக்கு 15 சதவீத வட்டியில் ரூ. 15,000 இலட்சம் கொண்ட சிறப்பான மீள் நிதியிடல் வசதியொன்று 180 நாட்களுக்கு வழங்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தனி நபர்களின் நெல், காய்கறிகள், ஏனைய குறிப்பிட்ட பயிர்கள் என்பவற்றின் உற்பத்தி தொடர்பான வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக் கொண்டு அவற்றுக்கெதிராக வழங்கப்பட்ட மத்திய வங்கி முற்பணங்கள் மீதான வட்டி வீதம் 1990 ஏப்பிறல் 1 தொடக்கம் ஆண்டுக்கு 1.5 சதவீதத்திலிருந்து ஆண்டுக்கு 4.5 சதவீதமாக அதிகரித்தது. இம் முற்பணங்கள் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டன. நெற் கொள்வனவு, உள்ளூரில் பயிரிடப்படும் குறிப்பிட்ட சில பயிர்களின் கொள்வனவும் களஞ்சியப்படுத்தலும் என்பவற்றிற்கு நிதியிடுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மைப் பணி நிலையங்கள், அதிகாரம் பெற்ற தனியாட்கள் ஆகியோரின் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக் கொண்டு அவற்றிற்கெதிராக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் மாற்றமின்றி ஆண்டிற்கு 3 சதவீதமாக விளங்கியது.

## நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியம்

1989 இன் இறுதியில் ரூ. 18,750 இலட்சமாக விளங்கிய நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் 1990 இன் இறுதியில் ரூ. 32,500 இலட்சத்திற்கு அதிகரித்தது. கடப்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தமையால் இவ்வாண்டில் ரூ. 13,750 இலட்சங் கொண்ட தொகை வங்கியின் பொது ஒதுக்குக் கணக்கிலிருந்து இந் நிதியத்திற்கு மாற்றப்பட்டது.

1990 இல் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை I இன் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி வீதத்தை ஆண்டுக்கு 12.5 சதவீதத்திலிருந்து ஆண்டுக்கு 14 சதவீதமாக மத்திய வங்கி மாற்றியமைத்ததுடன் மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வீதம் ஆண்டுக்கு 7 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. இதனால் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கான கடன் வழங்கும் இலாபத்தினை ஆண்டிற்கு 7 சதவீதத்திற்கு அனுமதித்தது. இத்திட்டத்தின் வகை II இன் கீழ் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலாப அளவு 1990 இல் 2 சதவீதப் புள்ளிகளால் 4 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. ஆனால் மீள்கடன் வழங்கலின் வீதங்களை முன்னைய பெறுமதியிலேயே பேணும் நோக்குடன் இவை தொடர்பான மத்திய வங்கியின் மீள் நிதியளித்தல் வீதங்களும் அதேயளவான சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. இத்திட்டத்தின் வகைகள் III, IV ஆகியவற்றிற்கான வட்டி வீதங்கள் மாற்றமெதுவுமின்றி முன்னைய நிலையிலேயே உள்ளன.

## நிதிக்கூட்டு நிலையங்களுக்கான கடன் உதவி

1988 இன் எண் 78 கொண்ட நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் 20 (4) (அ), 21 (1) பிரிவுகளின்படி, தற்காலிகத் திரவத் தன்மைப் பிரச்சனைகளை எதிர்நோக்கும் அத்துடன்/அல்லது நிருவாகமும், முகாமைத்துவமும் நாணயச்சபையால் பொறுப்பேற்கப்பட்ட வங்கியல்லா நிதி நிறுவனங்களுக்கு வர்த்தக வங்கிகள் வழங்கும் கடன் உதவித் தொழிற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கி தொடர்ந்தும் நிதிக் கடன் உதவியை வழங்கியது. இதன்பேரில் 1990 இன் இறுதிவரை ரூ. 6,840 இலட்சம் கொண்ட தொகை வழங்கப்பட்டுள்ளது.

**ஒதுக்குத் தேவைகள்**

வர்த்தக வங்கிகளின் கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களின் மீதான நியதி ஒதுக்கு விகிதம் இவ்வாண்டும் தொடர்ந்தும் 15 சதவீதமாகவே விளங்கியது. அதேவேளை ஒதுக்குத்தேவை நோக்கங்களுக்காக வைத்திருக்கப் படக்கூடிய திறைசேரி உண்டியல்களின் அளவும் 5 சதவீதமாகவே மாற்றமுறா திருந்தது.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

*(அ) கொடுகடன் உச்சவரம்பு*

*1989* யூன் *15* இலிருந்து, தனியார் துறைக்கு வழங்கப்பட்டதும் வெளி நின்றதுமான மொத்த முற்பணங்கள் *1989* மே *31* இல் வழங்கப்பட்டதும் வெளிநின்றதுமான மொத்த முற்பணங்கள் தொகையினை விஞ்சக்கூடாதென முன்னைய ஆண்டு வர்த்தக வங்கிகளை மத்திய வங்கி பணித்திருந்ததைப் போன்றே *1990* இலும் மத்திய வங்கி தொடர்ந்தும் கொடுகடன் உச்சவரம்புக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியது.

*(ஆ) கொடுகடன் பத்திரம் மீது பேணப்படவேண்டிய வரம்பு*

*1989* யூன் *15* இலிருந்து, அத்தியாவசியமற்றவையாகக் கருதப்பட்ட குறித்துரைக்கப்பட்ட இறக்குமதிகளுக்காக வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் களுக்கு வழங்கப்படும் கொடுகடன் பத்திரங்கள் மீது பேணப்படவேண்டிய காசு வரம்பு *100* சதவீதமாக அமையவேண்டுமென வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியால் விடுக்கப்பட்ட பணிப்புரை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

*1990* மாச்சு *30* இலிருந்து அத்தியாவசியமற்றவையாகக் கருதப்பட்ட விடயங்கள் பொருத்தமான விடயங்களில் உடற்கோப்புக்கள் முழுமையாகவே பிரிக்கப்பட்ட நிலையில் இறக்குமதி செய்யப்படுகையில் அவையும் *100* சதவீத வரம்புத் தேவைக்கு உட்படுத்தப்பட்டன. *1990* யூலை *30* இலிருந்து கட்டு நாயக்காவில் அமைந்திருக்கும் கொழும்பு சருவதேச விமான நிலையத்திலுள்ள தீர்வையற்ற கடைத் தொகுதிகளில் விற்பதற்கான பொருட்களின் இறக்குமதிகள் *100* சதவீத காசு வரம்புத் தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

**திறைசேரி உண்டியல்களில் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்**

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனைச் சுழல்வு *1989* இன் ரூ. *728,100* இலட்சத்திலிருந்து *1990* இல் ரூ. *679,070* இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே காலப்பகுதியில் மொத்தக் கொள் வனவும் ரூ. *214,280* இலட்சத்திலிருந்து ரூ. *213,550* இலட்சத்திற்கு வீழ்ச்சி யடைந்தது. வங்கியல்லாத்துறைக்கான தேறிய விற்பனைகளின் மொத்தத் தொகை *1989* இன் ரூ. *153,990* இலட்சத்திலிருந்து *1990* இல் ரூ. *81,320* இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தைத் தொழிற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்க கழிவு வீதங்கள் இவ்வாண்டில் *13.25* சதவீதத்திற்கும் *20.5* சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டன.

## இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் அடங்கும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதல் தொடர்பான திட்டங்களை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது.

## ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி

ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளு படிகள் தொடர்பாக வர்த்தக வங்கிகளால் செய்யப்பட்ட கோரல்களை மீளளிப் பதனை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. 1990 இல் ரூ. 6,684 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை மீளளிப்புச் செய்யப் பட்டது.

## கட்டாய சேமிப்புக்கள் நிதியம்

மத்திய வங்கி 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும், 1972 இன் எண் 15 கொண்ட வருமான உச்சவரம்பு, கட் டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பில் கட்டாயச் சேமிப்புக்கள் நிதியத்தையும் நிருவகித்தது. இவ்வாண்டில் பெறப்பட்ட 54 விண்ணப்பங்கள் தொடர்பாக வங்கி ரூ. 2 இலட்சத்தை (வட்டி உட்பட) உதவுநர்களுக்குச் செலுத்தியது.

## அரச கணக்குகள்

அரசின் வங்கியாளர் என்ற வகையில் மத்திய வங்கி அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியது. 1990 திசெம் பர் இறுதியில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 189 ஆகும்.

## நாணய வெளியீடு

பொதுமக்களிடமிருந்து நாணயத்திற்கு ஏற்பட்ட கேள்வியை ஈடுசெய்யும் வகையில் 1990 இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் தொடர்ந்தும் அதிகரித்துச் சென்றது. சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயம் முன்னைய ஆண்டைவிட 13.1 சதவீதத்தால் அதிகரித்து 1990 இன் இறுதியில் ரூ. 239,000 இலட்சமாக விளங்கியது.

1990 இல் சுற்றோட்டத்திலுள்ள தாள்களின் பெறுமதி முன்னைய ஆண்டைவிட 13.2 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 228,680 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் 1990 இன் இறுதியில் சுற் றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 95.6 சதவீதத்தை உள்ளடக்கியிருந் தன. பெறுமதி நியதிகளில் சுற்றோட்டத்திலுள்ள மொத்த தாள்களில் ரூ. 1,000 இனத் தாள் 52.1 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இதனையடுத்து ரூ. 500 (23.0 சதவீதம்) ரூ. 100 (16.9 சதவீதம்) ரூ. 50 (3.8 சதவீதம்) ரூ. 10 (2.4 சதவீதம்) ரூ. 20 (1.4 சதவீதம்) தாள்களும் இதே ஒழுங்கில்

காணப்பட்டன. அளவு நியதிகளில் 10 ரூபாத் தாள் அதிகூடிய சுற்றோட்டத்தையும், இதனையடுத்து ரூ. 100, ரூ. 50, ரூ. 20, ரூ. 1,000, ரூ. 500 தாள்களும் என்ற ஒழுங்கில் காணப்பட்டன. வங்கி ரூ. 1, ரூ. 2, ரூ. 5 ஆகிய தாள்களைச் சுற்றோட்டத்திலிருந்து படிப்படியாகப் புறக்கீடு செய்யும் அதன் கொள்கையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

1990 இறுதியில் ரூ. 1,080 இலட்சம் பழுதடைந்த தாள்கள் சுற்றோட்டத்திலிருந்து புறக்கீடு செய்யப்பட்டன. ரூ.91,120 இலட்சம் முகப்புப்பெறுமதியைக் கொண்ட இவ்வகைத் தாள்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்டு அழிக்சப்பட்டன.

1990 இறுதியில் சுற்றோட்டத்திலுள்ள குத்திகளின் பெறுமதி ரூ. 10,310 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 12.3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. (இது ரூ. 1,340 இலட்சம் பெறுமதி கொண்ட ஞாபகார்த்த குத்திகளையும் உள்ளடக்கும்).

பெறுமதி நியதிகளில் சுற்றோட்டத்திலுள்ள மொத்தக் குத்திகள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 4.4 சதவீத பங்கினை உள்ளடக்கியிருந்தன. 1990 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள குத்திகளில் ரூ. 5 ஆகக்கூடிய பெறுமதியினையும் அதனைத் தொடர்ந்து ரூ. 1, ரூ. 2, 50 சதம், 25 சதம், 10 சதம், 5 சதம், ரூ. 10, 02 சதம், 01 சதம் ஆகிய குத்திகள் அதே ஒழுங்கிலும் காணப்பட்டன. அளவு நியதிகளில் 05 சதம் அதிகூடிய சுற்றோட்டத்தையும் அதனைத் தொடர்ந்து 10 சதம், 01 சதம், 02 சதம், 25 சதம், 50 சதம், ரூ. 1, ரூ. 2, ரூ. 5, ரூ. 10, ரூ. 500 ஆகிய குத்திகள் அதே ஒழுங்கிலும் காணப்பட்டன.

1990 ஓகத்து 28 இல் மத்திய வங்கி அதன் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ரூ. 500 பெறுமானம் கொண்ட ஞாபகார்த்த வெள்ளிக் குத்தியை வெளியிட்டது.

மத்திய வங்கியின் பிரதேசப் பணிகளை விரிவுபடுத்தும் வகையில் அநுராதபுரம், மாத்தறை ஆகிய பிரதேச அலுவலகங்களில் முறையே 1990 யூன் 01, 1990 யூலை 01 ஆகிய திகதிகளில் காசுத் தொழிற்பாடுகள் தொடங்கப்பட்டன.

1990 இல் வங்கிக்குத் தேவையான சகல அச்சிடப்பட்ட நாணயத் தாள்களையும் இலங்கை அரசுடன் கூட்டாக அமைக்கப்பட்ட பியகமவிலுள்ள கூட்டு முயற்சி பாதுகாப்பு அச்சிடல் பொறித்தொகுதியான வரையறுக்கப்பட்ட (தனியார்) பிராட்பறி வில்கின்சன் வழங்கியது. தலைமைக் கூட்டு நிலையத்தின் சொத்துரிமையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து எதிர்காலத்தில் தனது பெயர் வரையறுக்கப்பட்ட (தனியார்) தோமஸ் தீ லா றூ லங்கா என அறியப்படும் வகையில் இக்கூட்டு நிலையம் 1990 திசெம்பர் 19 இலிருந்து தனது பெயரை மாற்றியமைத்தது.

## வங்கித்தொழில் அபிவிருத்தி

1990 திசெம்பரில் நாட்டில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 24 ஆக அமைந்து 6 உள்நாட்டு வங்கிகளையும் 18 வெளிநாட்டு வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தது. உள்நாட்டு வங்கிகள் 2 அரச வங்கிகளையும், 4 தனியார் வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தன.

வங்கித்தொழில் பணிகளை விரிவாக்கும் வகையில் 1990 இல் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 30 ஆல் அதிகரிக்கப்பட்டதன்மூலம் கிளைகளின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 740 இனை அடைந்தது. இரண்டு அரச வங்கிகளிலும் இலங்கை வங்கி முக்கிய பங்கினை வகித்து 1990 இல் அதன் கிளையமைப்பை மேலும் விரிவுபடுத்தியது. ஐந்து புதிய கிளைகள் பிலியந்தல, கங்வெல்ல, திகன, இமடுவ, திக்வெல்லை ஆகிய இடங்களில் திறக்கப்பட்டவேளையில் கலகா, குருவிற்ற, அயகம, மதுரட்டை ஆகிய இடங்களிலிருந்த வேளாண்மைப் பணிநிலையக் கிளைகள் 'சி' தர நிலைக்குத் தரமுயர்த்தப்பட்டன. மதுரட்டை வேளாண்மைப் பணிநிலையக் கிளை தர முயர்த்தப்பட்டபின் ''பாடியாபலெல்ல'' என மீளப் பெயரிடப்பட்டது. 1990 காலப்பகுதியில் கிபிசா, வில்கமுவா ஆகிய இடங்களிலிருந்த வேளாண்மைப் பணிநிலையக் கிளைகள் முறையே தம்புல்லை, கசலாகா முதன்மைக் கிளைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டவேளையில் மாங்குளம், கிண்ணியா ஆகிய இடங்களிலுள்ள இரு முதன்மைக் கிளைகளும் கோபிகண என்ற இடத்திலுள்ள வேளாண்மைப் பணி நிலையக் கிளையொன்றும் மீண்டும் திறக்கப்பட்டன. மேலும் 1990 காலப்பகுதியில் வலஸ்கலவிலிருந்த முதன்மைக் கிளையும் பம்பகின்ன, கொடகொட ஆகிய இடங்களில் இருந்த இரண்டு வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளும் மூடப்பட்டன. இவற்றின் விளைவாக இலங்கை வங்கியினது முதன்மைக் கிளைகளின் எண்ணிக்கை 247 ஆக அமைந்தவேளையில் வேளாண்மைப் பணிநிலையக் கிளைகளின் எண்ணிக்கை 38 ஆகக் காணப்பட்டது. இலங்கை வங்கியின் வெளிநாட்டுக் கிளைகளின் எண்ணிக்கை 2 ஆக மாற்றமின்றியிருந்தது.

மக்கள் வங்கி வெளியூர்க் கிளைகள் இரண்டினை மாறவிலையிலும், பாணந்துறையிலும் முறையே 1990 மாச்சிலும், ஏப்பிறலிலும் திறந்தது. கூட்டுறவுக் கிளையும், தலைமையலுவலகக் கட்டிடத்தில் 1990 நவெம்பரில் திறக்கப்பட்டது. அதேவேளை இவ்வாண்டுக் காலத்தில் கிண்ணியா, மகாஓயா கிளைகளும் மீளத் திறக்கப்பட்டன. இம்மாற்றங்களின் விளைவாக நாட்டில் தொழிற்படும் மக்கள் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 1990 இறுதியில் 306 இற்கு அதிகரித்தது.

1990 இல் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி 3 புதிய கிளைகளைப் பிலியந்தலை, சிலாபம், பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் திறந்தது. அத்துடன் கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் சுங்கப் பகுதிக்கு நுழைய முன்னுள்ள பகுதியில் ஒரு பீடத்தையும் திறந்ததன்மூலம் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை 39 இனை அடைந்தது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் பொரளை, கேகாலை, நுகேகொடை ஆகிய இடங்களில் 3 புதிய கிளைகளை நிறுவியதுடன் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 19 இற்கு அதிகரித்தது. சம்பத் வங்கி வத்தளையிலும், மாத்தறையிலும் இரு புதிய கிளைகளைத் திறந்ததுடன் அதன் கிளையமைப்பு 13 இற்கு விரிவடைந்தது. கொள்ளுப்பிட்டிய

லுள்ள லிபேட்டி பிளாசாவில் தன்னியக்க ரெல்லர் பொறியும் நிறுவப்பட்டது. அதேவேளை 1990 இல் வரையறுக்கப்பட்ட செலான் வங்கி 11 புதிய கிளைகளை திறந்தமையின் மூலம் அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 17 இனை அடைந்தது. இவை காலி, இரத்தினபுரி, கொள்ளுப்பிட்டி, கேகாலை, மொரட்டுவ, நுகேகொட, கம்பகா, நீர்கொழும்பு, தெகிவளை, சிலாபம், கண்டி ஆகிய இடங்களில் அமைந்திருந்தன.

வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் கபிப் வங்கியும், ஸ்டான்டட் சாட்டட் வங்கியும் முறையே நவம்மாவத்தையிலும், பம்பலப்பிட்டியிலும் ஒவ்வொரு கிளைகளைத் திறந்தன. இவ்விரு கிளைகளின் அதிகரிப்புடன் வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1990 இறுதியில் 23 ஆக விளங்கியது.

1990 ஒத்தோபரில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியொன்று பதுளை நிருவாக மாவட்டத்தில் திறக்கப்பட்டதுடன் இவ்வாண்டில் இது பதுளை, வெலிமட, தியத்தலாவை, பசறை ஆகிய இடங்களில் நான்கு கிளைகளையும் திறந்துள்ளது. குருநாகல், அம்பாந்தோட்டை, கண்டி, மொனராகலை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் அவை தொடர்பான மாவட்டங்களில் ஒவ்வொரு கிளைகளைத் திறந்ததன் மூலம் அவற்றின் கிளையமைப்பினை விரிவாக்கிக் கொண்டன. புத்தளம், நுவரேலியா மாவட்டத்திலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒவ்வொன்றும் இரு கிளைகளைத் திறந்தன. கேகாலைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி அதன் பன்வல கிளையை றுவான்வெல கிடையுடன் ஒன்றிணைத்ததால் அதன் கிளைகளினது எண்ணிக்கை 10 இற்குக் குறைவடைந்தது. இம்மாற்றங்களின் விளைவாக 1990 இறுதியில் தொழிற்படும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 100 இற்கு உயர்வடைந்தது. தேசிய சேமிப்பு வங்கி 7 புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1990 இறுதியில் 76 இற்கு அதிகரித்தது.

தற்போதுள்ள வங்கித்தொழில் அமைப்புக்களில் புதிய திருத்தங்களையும், முன்னேற்றங்களையும் திணிக்கும் நோக்குடன் மிக நவீனத்துவமும் புதிய முறைகளையும் கொண்ட வங்கித்தொழில் நுட்பங்களையும், கருவிகளையும் பின்பற்றுவதன்மூலம் வங்கித்தொழில் பணிகளை அபிவிருத்தி செய்யும் போக்கு 1990 இலும் தொடர்ந்தது. மேலுமொரு தனியார்துறை வங்கியான ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியும் நடைமுறை, சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்குத் தன்னியக்க ரெல்லர் பொறிமுறையை அறிமுகப்படுத்தியது. சேமிப்புக் கணக்குகளிலிருந்தான மீளப்பெறுகைகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு சேமிப்புக் கணக்குகளின் மீது காசோலை மூலம் எடுப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட வசதி மத்திய வங்கியின் தீர்மானத்தின்படி 1990 ஏப்பிறல் 23 ஆம் நாளிலிருந்து மீளப் பெறப்பட்டது. பிணைகளை அடிப்படையாகக் கொண்ட சடன் வழங்கல்சளுக்கு மாறாக செயற்றிட்ட/அபிவிருத்தி சார்ந்த கடன் வழங்கல்களை வலியுறுத்தும் அரசின் கொள்கை நெறிமுறைகளுக்கிசைவாக சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் சுய வேலைவாய்ப்புச் செயற்றிட்டங்களுக்கும் வேலையற்ற இளைஞர்களுக்கும் நிதி வழங்கும் சிறப்புத் திட்டங்களை வர்த்தக வங்கிகள் தொடர்ந்தும் மேற்கொண்டன.

**சிறுவேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்**

வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் கனடா பன்னாட்டு அபிவிருத்தி முகவரினாலும் நிதியிடப்பட்ட சிறு வேளாண்மை மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் நிறைவேற்று முகவராக மத்திய வங்கி இருந்து வருகின்றது. ஏறத்தாள 32,870 குடியிருப்பாளர்களின் கிராமிய வறுமையை ஒழித்ததுடன் புத்தளம், கண்டி, காலி, மாத்தறை மாவட்டங்களின் பிரதேச அபிவிருத்திக்கும் உதவுவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். வறிய கிராம மக்களின் குறுங்கால, நடுத்தரகாலக் கொடுகடன் தேவைகளை ஈடுசெய்வதற்காக அவர்களுக்குச் சிறிய பிணைகளுடன் அல்லது பிணைகளற்ற நிறுவன ரீதியான கொடுகடன்களுடன் பொருத்தமான செலவுகளைக் கொண்ட விரிவாக்கப் பணிகளை ஏற்படுத்துவதே இச்செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். கிராமிய அடிப்படையிலான வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் பெண்களைப் பெருமளவிற்கு ஈடுபடத் தூண்டுவதனையும் பிரதேச மட்டத்தில் மீள் முதலீடுகளை மேற்கொள்வதற்காகக் கிராமிய சேமிப்புக்களை பெருமளவில் திரட்டுவதனையும் இச்செயற்றிட்டம் எதிர்பார்க்கிறது.

1989 இல் இச்செயற்றிட்டம் தொடங்கிவிட்டபோதும் குழப்பநிலைமைகளின் காரணமாகச் செயற்றிட்ட மாவட்ட அலுவலகங்களைத் திறப்பது தாமதமாகியது. இதன்படி புத்தளம், கண்டி அலுவலகங்கள் 1990 மேயிலும், காலி, மாத்தறை அலுவலகங்கள் 1990 திசெம்பரிலும் திறக்கப்பட்டன. கொடுகடன் திட்டங்களும் நான்கு மாவட்டங்களிலும் முறையே 1990 மேயிலும், திசெம்பரிலும் திறக்கப்பட்டன.

நன்மையடைந்தோரின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை புத்தளம், கண்டி மாவட்டங்களில் ஏறத்தாள 18,770 ஆகவும் காலி, மாத்தறை மாவட்டங்களில் 14,100 ஆகவும் காணப்பட்டது. செயற்றிட்டம் வழங்கிய மொத்த நிதியான ரூ. 5,179 இலட்சத்தில் அரசின் பங்களிப்புத் தொகை 23 சதவீதமாக இருந்தது.

இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு, அரசல்லா அமைப்புக்கள், வெளிநாட்டு முகவர்கள் ஆகியன பங்கேற்றன. நான்கு மாவட்டங்களிலுமுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் இச்செயற்றிட்டத்திற்கான நிதி நிறுவனங்களாக இருந்து இச்செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்கினைக் கொண்டிருந்தன. தொகுதிக் கொடுகடன் வழங்கல் பொறிமுறையில் பங்கேற்கும் முகவர்களுக்கு முக்கிய பங்கு வழங்கப்பட்டுள்ளது.

**வங்கி மேற்பார்வை**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 1990 இல் ஒரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி உட்பட 13 வர்த்தக வங்கிகள் தொடர்பான பரீட்சிப்புக்களை மேற்கொண்டதுடன் இவற்றில் ஒன்பது பரீட்சிப்புக்களை ஆண்டினிறுதிக்கு முன்னமேயே முடித்துக் கொண்டது. 1989 இல் இறுதியாக்கப்படாத மூன்று வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்களையும் திணைக்களம் பூர்த்தி செய்துள்ளது.

வர்த்தக வங்கிகள் தொடர்பாக அவற்றின் அலுவலகங்களுக்குச் செல்லாமலே அதன் கண்காணிப்பினைத் தொடருகின்ற விதத்தில் திணைக்களம் வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்களின் அடிப்படையில் அவற்றின் நிதி நிலைமைகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது. 1988 இன் எண் 30 கொண்ட வங்கித் தொழில் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள் பற்றிய பட்டியல்கள் மீது காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட திரட்டுக்களையும் ஏனைய கூற்றுக்களையும் ஆய்வு செய்தமையின் மூலம் வர்த்தக வங்கிகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல் மேலும் வலுவாக்கப்பட்டது. மேலும் வர்த்தக வங்கிகளின் அலுவலகங்களுக்குச் சென்றும், அவ்வாறு அலுவலகங்களுக்குச் செல்லாமலும் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்புக்களின்போது கண்டுபிடிக்கப்பட்ட, வர்த்தக வங்கிகளினால் அவற்றுக்குப் பொருந்தத்தக்க சட்டங்கள், ஒழுங்குகள் ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் என்பவற்றின் மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வர்த்தக வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வை தவிர, ஆகக்குறைந்த மூலதன மற்றும் திரவ விகிதங்கள், தனியொரு கடன்பாட்டாளருக்கான கடன் வழங்கல் மீதான உச்ச எல்லை, பணிப்பாளர்களுக்கான கடன் வழங்கல், பங்குடைமைகள் மீதான வட்டியும் கட்டுப்பாடுகளும் என்பனவற்றை எடுத்துரைக்கும் வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளை வர்த்தக வங்கிகள் பின்பற்றுகின்றனவா என்பது பற்றித் திணைக்களம் தொடர்ச்சியாகக் கண்காணித்தது. மேலும் திணைக்களம் அதன் மேற்பார்வையிடும் தொழிற்பாட்டை வலுவாக்குமொரு வழிமுறையாக, முன்னுரிமையல்லாத் துறைகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், இன்றியமையாதனவல்லாதனவெனக் கருதப்பட்ட குறிப்பிட்ட இறக்குமதிகளுக்கான கொடுகடன் பத்திரத்தின் மீதான காசு வரம்புத் தேவைப்பாடுகள் என்பனவற்றின்மீது 1989 யூனில் விதிக்கப்பட்ட கொடுகடன் உச்சவரம்புகளுக்கு வர்த்தக வங்கிகள் இணங்கி ஒழுகுகின்றனவா என்பது பற்றியும் திணைக்களம் கண்காணிப்பை மேற்கொண்டது. வெளிநாட்டு நாணயங்களின் நிலைமைபற்றிய நாளாந்த திரட்டுக்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் வர்த்தக வங்கிகள் மீது விதிக்கப்பட்ட தொழிற்படு நிலுவை எல்லையை அவை பின்பற்றுவது பற்றியும் திணைக்களம் கண்காணித்தது. நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதில் ஒரு சீரான முறையொன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை அங்கீகரிக்கின்ற விதத்தில் 1990 செத்தெம்பர் 18 ஆம் நாளின் எண் 628/10 கொண்ட அரச செய்திமடலில் வங்கித் தொழில் சட்டத்தின் பகுதி 'V' இனை நடைமுறைப்படுத்துவது பற்றி அறிவித்தலொன்றை வெளியிடுவதற்குத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டது. வங்கித் தொழில் சட்டத்தின் பகுதி 'V' இனை நடைமுறைப்படுத்துவதன் விளைவாகத் திணைக்களம் ''வங்கிகளுக்கான கணக்குகள் வடிவமைப்பு'' என்பதனை அறிமுகப் படுத்தியதன் வாயிலாக வர்த்தக வங்கிகளினால் ஆண்டு நிதிக் கூற்றுக்களை வழங்குவதில் வெளிப்படுத்தப்படவேண்டிய ஆகக் குறைந்த தரங்கள் நிறுவப்பட்டன. செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியை இடைநிறுத்தல், அறவிடமுடியா, மற்றும் ஐயத்திற்கிடமான முற்பணங்கள் என்பனவற்றிற்செதிரான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் என்பன தொடர்பாக வர்த்தக வங்கிகளினால் ஒழுகப்படவேண்டிய நெறிமுறைத் தொகுப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

''வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின்'' கீழ் வர்த்தக வங்கிகளினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களையும் அவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த திரட்டல்களின் அடிப்படையில் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. உள்நாட்டு வங்கிகள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் இரண்டினதும் இலாபத் தன்மை திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திரட்டல்களின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 32 (உ) இன் கீழ் 1987 ஏப்பிறலில் பிரகடனப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் தொழிற்பாட்டிற்கு வந்த வைப்புக் காப்புறுதித் திட்டத்தினையும் திணைக்களம் 1990 இல் தொடர்ந்தும் நிருவகித்து வந்தது. இத்திட்டம் சுய விருப்பு அடிப்படையில் வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவற்றையும் உள்ளடக்கி இருந்தது.

1990 காலப்பகுதியில் 116 கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கிளையமைப்பினைக் கொண்ட 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இத் திட்டத்தின்கீழ்ப் பதிவு செய்வதற்கான அவற்றின் விண்ணப்பங்களைக் கவனத்தில் எடுப்பதற்கு முன்னர் திணைக்களத்தினால் பரீட்சிக்கப்பட்டன.

1990 திசெம்பர் இறுதியில் இரண்டு வர்த்தக வங்கிகள், மூன்று பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், எட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அறுபத்தைந்து கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் என்பன காப்புறுதி செய்யப்பட்ட வங்கிகளாகவும், காப்புறுதி செய்யப்பட்ட சங்கங்களாகவும் பதிவு செய்யப்பட்டன.

## நிதிக்கூட்டு நிலையங்களின் மேற்பார்வை

நிதிக்கூட்டு நிலையங்களுடனான மொத்த வைப்புக்கள் 1989 இறுதியின் ரூபா 65,270 இலட்சத்திலிருந்து 1990 இறுதியில் ரூ. 67,070 இலட்சத்திற்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பு, 1989 இறுதியில் 60 ஆகக் காணப்பட்ட செயல் திறனுடைய நிதிக்கூட்டு நிலையங்களின் எண்ணிக்கையை 1990 இறுதியில் 40 இற்குக் குறைப்பதற்குக் காரணமாக இருந்த நிதித்துறையின் நிதிக்கூட்டு நிலையத் துணைத்துறையில் முன்னேறிக் கொண்டிருக்கும் மீள்நிறுவு நடவடிக்கைகளின் பின்னணியில் நோக்கப்படல் வேண்டும். 1990 இறுதியில் நிதி வியாபாரத்தை நடத்திச் செல்வதற்காக 20 நிதிக்கூட்டு நிலையங்களுக்குப் பதிவினையும் உரிமத்தினையும் மத்திய வங்கியின் நாணயச் சபை வழங்கியது. பதிவு செய்யப்பட்ட இக்கூட்டு நிலையங்களின் மொத்த வைப்புக்கள் 1990 இறுதியில், ரூ. 54,230 இலட்சமாக விளங்கின. 1990 இல் நிதிக்கூட்டு நிலையங்களின் வைப்புக்களின் பொதுவான அதிகரிப்பு 2.7 சதவீதமாக விளங்கியவேளையில் பதிவுசெய்யப்பட்ட 20 கூட்டு நிலையங்களினதும் வைப்புக்களின் அதிகரிப்பு 12.2 சதவீதமாகக் காணப்பட்டது.

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட கூட்டு நிலையங்களின் தலத்திலேயான பரீட்சிப்புக்களையும் அவைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட புள்ளி விபரத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்புக்களையும் நடாத்தி தொடர்ந்தும் மேற்பார்வையினையும் மேற்கொண்டது. நிதிக்கூட்டு நிலையங்கள் மீதான மத்திய வங்கியின் மேற்பார்வைப் பணிகளையும் முறைப்படுத்தும் பணிகளையும் மேலும் உறுதிப்படுத்தும் பொருட்டு 1988 இன் எண் 78 கொண்ட நிதிக்கூட்டு நிலையச் சட்டத்திற்கான திருத்தங்கள் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (அத்தியாயம் 40) பிரிவு 5 இன் கீழ் அவசரகால ஒழுங்குவிதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. முன்னைய ஆண்டினைப் போலவே நிதிக்கூட்டு நிலையங்கள் தொடர்பாக அனைத்தையும் உள்ளடக்கிய தலத்திலேயான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. நிதிக்கூட்டு நிலையங்களைப் பதிவுசெய்தலின் முதல் விடயமாகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதிபெற்றுள்ள கூட்டு நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் ஆழமாகப் பரீட்சிக்கப்பட்டன. 1989 பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்துடனான எச்சரிக்கை அறிவிப்பு முறையின் ஊடாகத் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு 1990 இலும் தொடர்ந்தது.

முறையற்ற முகாமைத்துவத்தின் தெளிவான அறிகுறிகளைக் காட்டிய நிதிக் கம்பனியொன்று 1988 இன் எண் 78 கொண்ட நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவு 12 (ஈ) யின் கீழ் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட சுதந்திர கணக்காய்வாளர் நிறுவனத்தின் புலன் விசாரணைக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இதே சட்டத்தின் பிரிவு 18 (1) இன் நியதிகளுக்கிணங்கக் கூட்டு நிலையத்தின் வியாபார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதுடன் இடைநிறுத்தப்பட்ட காலம் முடிவடைந்தபின் நிதி வியாபாரத்தை மாற்றி வைப்புப் பொறுப்புக்களின் தீர்ப்பனவுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைச் சமர்ப்பிக்கும்படியும் கூட்டு நிலையம் பணிக்கப்பட்டது.

**கூட்டுநிலையங்களைப் பதிவு செய்தல்**

1988 இன் எண் 78 கொண்ட நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளுக்கிணங்க, 1982 இன் எண் 17 கொண்ட கூட்டுநிலையங்களின் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டதும் ஆகக் குறைந்தது ரூ. 50 இலட்சத்திற்குக் குறையாத வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனத்தைக் கொண்டதும் மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டதுமான பொதுக் கூட்டு நிலையங்கள் மட்டுமே நிதி வியாபாரத்தை நடாத்திச் செல்ல அனுமதிக்கப்படும். எனினும் நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாளில் நிதி வியாபாரத்தை நடாத்திக் கொண்டிருந்த நிறுவனங்கள் அவை சட்டத்தின் நியதிகளுக்கிணங்கப் பதிவு செய்யப்பட்டிராவிடினும் 2 ஆண்டுகள் மாற்றமுறும் காலப்பகுதியில் தமது நிதி வியாபார நடவடிக்கையை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டன. செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களினூடாக பொதுமக்கள் 1990 திசெம்பர் 18 இல் மாற்றமுறும் காலம் முடிவடைந்தபின் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களினால் நிதி வியாபாரத்தை நடாத்திச் செல்லல் சட்டவிரோதமானதாகும் என அறிவிக்கப்பட்டனர்.

1990 இன் இரண்டாம் அரைப்பகுதியில் மத்திய வங்கி 1988 இன் நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதிக்கூட்டு நிலையங்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தது. 1990 யூனின் சட்டத்தின் கீழ் நிதிக்கூட்டு நிலையங்களின் பதிவு மற்றும் உரிமம் வழங்கல் தொடர்பான விதிகளும், விண்ணப்பத்திற்காகக் குறித்துரைக்கப்பட்ட படிவங்களும் வெளியிடப் பட்டதைத் தொடர்ந்து 1990 இல் 30 நிதிக்கூட்டு நிலையங்கள் பதிவுக்காக விண்ணப்பித்தன. 1990 இறுதியில் இவற்றில் பதிவுக்கான தேவைகளைத் திருத் திப்படுத்திய 20 கூட்டு நிலையங்களுக்கு 12 மாத காலப்பகுதிக்கு நிதி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமம் வழங்கப்பட்டது.

1990 திசெம்பர் 18 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டிராத நிதிக்கூட்டு நிலையங்கள் அவற்றின் நிதி வர்த்தகத்தை மாற்றும்படியும் 1990 திசெம்பர் 17 ஆம் நாள் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 1990 இன் எண் 2 கொண்ட பணிப்பின்படி பணிப்பு வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள் வைப்பாளர்களுக்கான பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஆரம்பிக்கும்படியும் பணிக்கப்பட்டன. பணிப்பு எண் 2 இன் நியதிகளுக்கிணங்கப் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட முறையில் வைப்புப் பொறுப்புக்களைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டன.

(1) 1990 திசெம்பர் 19 ஆம் நாளன்று ரூ. 400 இலட்சத்தை விஞ்சிய வைப்புப் பொறுப்புக்களைக் கொண்டிருந்த நிதி நிறுவனங்கள் அவர் களின் வைப்புக்களை மாதமொன்றுக்கு 5 சதவீதத்திற்குக் குறையாத வகையில் செலுத்துதல் வேண்டும்,

(2) ரூ. 400 இலட்சத்தை விஞ்சாத வைப்புக்களைக் கொண்டுள்ள நிதி நிறுவனங்கள் வைப்புக்களை மாதமொன்றுக்கு 8.5 சதவீதத்திற்குக் குறையாமல் செலுத்துதல் வேண்டும்.

1990 இல் நிருவாகமும் முகாமைத்துவமும் மத்திய வங்கிக்கு உரிமை யாக்கப்பட்ட ஐந்து நிதிக் கூட்டுநிலையங்களின் பணிப்பாளர்களின் மீது குற்ற வியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமா என்பது பற்றி பரிசீலனை செய் வதற்காக இக்கூட்டு நிலையங்கள் மீதான புலனாய்வு அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. வழக்குத் தொடருவதற்கான மேலதிக சான்றுகளைச் சேகரிக்கும் பொருட்டு இவற்றில் இரண்டு அறிக்கைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் அலு வலர்கள் கொழும்புக் கோட்டை, கம்பகா, பாணந்துறை ஆகிய இடங்களில் உள்ள நீதவான் நீதிமன்றங்களில், 1988 எண் 78 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கீழான பல குற்றங்கள் தொடர்பாக ஒன்பது நிதிக் கூட்டு நிலையங்களின் 46 பணிப்பாளர்களுக்கெதிராக 75 வழக்குகளைத் தொடர் ந்தனர். குற்றங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் அட்டவணை 2.3 இல் தரப்பட்டுள்ளது. மேலும் நாணயச்சபைக்கு உரிமை யளிக்கப்பட்ட கூட்டு நிலையங்களுக்குச் சேரவேண்டிய கடன்களை மீட்பதற்கான 69 வழக்குகளும் நீதிமன்றங்களில் தொடரப்பட்டன. இவற்றில் ஏழு வழக்குகள் பணிப்பாளர்களுக்கு எதிராகத் தொடரப்பட்டவையாகும்.

அட்டவணை 2.3

### 1990.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்காலப்பகுதியில் 1988 இன் எண் 78 கொண்ட நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கீழான குற்றங்களுக்காகத் தொடரப்பட்ட வழக்குகள்

| குற்றத்தின் தன்மை | கூட்டுநிலையங்களின் எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை ** | வழக்குகளின் எண்ணிக்கை | குறிப்புகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | குற்றத் தீர்ப்புகள் | முடிவடையாதவை |
| 1. ஒப்புதலளிக்கப்பட்ட பிணைப்பத்திரங்களில் மாத இறுதிச் சராசரி வைப்புப் பொறுப்புக்களில் 6% சதவீதத்தினை முதலீடுசெய்யத்தவறியமை ... | 05 | 22 | 27 | — | 27 |
| 2. திரவச்சொத்துக்களின்வடிவில் வைப்புப் பொறுப்புக்களின் 15% இனைப்பேணத்தவறியமை ... | 01 | 05 | 05 | — | 05 |
| 3. வியாபாரத்தலத்தினை அனுமதியின்றிமாற்றுதல் ... | 01 | 07 | 07 | 06 | 01 |
| 4. கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கத்தவறியமை | 05 | 21 | 21 | 08 | 10 |
| 5. சொத்துக்கள் பொறுப்புக்கள்மீது மாதாந்தக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கத்தவறியமை ... | 01 | 05 | 15 | — | 15 |

குறிப்புக்கள்: * 3 வழக்குகள் சமாதானமாத் தீர்க்கப்பட்டன.

** சில பணிப்பாளர்கள் வேறுபட்ட குற்றங்களுக்காக ஒரு தடவைக்கு மேலாக வழக்குத் தொடரப்பட்டனர்.

நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்திற்கான திருத்தங்களாகப் பொதுப்பிணையங்கள் சட்டம் (அத்தியாயம் 40) பிரிவு 5 இன் பின்வரும் திருத்தங்கள் சனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டன.

(அ) 1990 இன் எண் 1 கொண்ட அவசரகால ஒழுங்கு விதிகளின் (நிதிக் கூட்டு நிலையங்கள்) நியதிகளுக்கிணங்க 1988 இன் எண் 78 கொண்ட நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவு 25 அதனது துணைப்பிரிவு ஒன்றினால் பதிலிடங் கொள்ளப்பட்டுத் திருத்தப்பட்டுள்ளது. இதனது நோக்கம் என்னவெனில் கூட்டு நிலையத்துக்குச் சொந்தமான ஆதனத்தைத் துர்ப்பிரயோகத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற பயன்பாட்டின் மூலம், மோசடி நோக்கிலும் முறையற்ற வகையிலும் சட்டவிரோதமாகவும் தம்மை வளம்படுத்திக் கொண்ட அல்லது விடுபடல் காரணமாக வேறு எவரேனும் ஒருவரை வளம்பெறச் செய்த பணிப்பாளர், முதன்மை நிறைவேற்றுனர், முகாமையாளர், ஊழியர் அல்லது நிதிக்கூட்டு நிலையத்தின் முகவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும்பொருட்டுப் பிரிவு 25 இல் உள்ளடக்கப்பட்டுள்ள சிறப்புச் செயல்முறையினை உறுதிப்படுத்துவதாகும்.

(ஆ) 1990 இன் எண் 2 கொண்ட அவசரகால (நிதிக்கூட்டு நிலையங்கள்) ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க 12ஆ என்ற புதிய பிரிவு ஒன்று இச்சட்டத்தில் உட்படுத்தப்பட்டது. இந்தத் திருத்தத்தின் நோக்கம் என்னவெனில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கூட்டு நிலையங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு நாணயச் சபையினால் பிரதிநிதிகளை நியமிக்க இயலச் செய்வதாகும்.

1989 இல் செயற்படத் தொடங்கிய வைப்பாளர் நிவாரணத் திட்டம் 1990 இல் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இடருக்குள்ளான நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளின் முன்னேற்றம் அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளது. நிவாரணத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் முக்கியமாக மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தினால் மீள் நிதியிடப்பட்டது. இந்தக் கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களின் மொத்தம் ரூ. 2,140 இலட்சமாக விளங்கியது.

அட்டவணை 2.4

**1990 திசெம்பரில் உள்ளபடி வைப்பாளர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளின் முன்னேற்றம்**

| நிதிக் கூட்டுநிலையத்தின் பெயர் | வைப்புக்களின் மொத்த எண்ணிக்கை (1) | கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்புக்களின் எண்ணிக்கை (2) | மொத்தவைப்புக்களின் சதவீதமாக கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்புக்களின் எண்ணிக்கை (3) | செலுத்தப்பட்ட தொகை (ரூ. '000) (4) |
|---|---|---|---|---|
| யூனியன் றஸ்ற் அன்ட் இன்வெஸ்ற்மென்ற் லிமிட்டெட் ... | 18,331 | 13,245 | 72.2 | 1,44,080 |
| இடேக்கி பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ற் லிமிட்டட் ... | 4,487 | 4,131 | 92.1 | 44,238 |
| கோம் பினான்ஸ் லிமிட்டட் ... | 12,589 | 2,972 | 23.6 | 26,685 |
| சாறபூமி இன்வெஸ்மென்ட் கொம்பனி (பிறைவட்) லிமிட்டெட் ... | 401 | 358 | 89.3 | 3,678 |
| தபினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிட்டட் | 3,198 | 401 | 12.5 | 1,151 |
| காசல் பினான்ஸ் லிமிட்டட் ... | 2,756 | 2,479 | 89.9 | 30,814 |
| மொத்தம் | 41,758 | 23,586 | 56.5 | 250,646 |

அரசுசாரா அமைப்பொன்றுடன் மத்திய வங்கியினால் ஆதரவளிக்கப்பட்ட வங்கியல்லா நிதித்துறையினை மீள் அமைத்தல் பற்றிய கருத்தரங்கு ஒன்று 1990 யூலை 28 இல் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் நிதிக்கூட்டு நிலையங்கள், கணக்காய்வு மற்றும் சட்ட ஆலோசனை நிறுவனங்கள் என்பனவற்றின் மூத்த முகாமையாளர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். நிதிக்கூட்டு நிலைய

துணைத்துறையினை மீள் அமைத்தல் தொடர்பான விரிவான வீச்சிலான தலைப்புக்கள் பற்றிக் கருத்தரங்கில் கலந்துரையாடப்பட்டன. மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணாதிலக அவர்கள் ''தொண்ணூறுகளுக்கான நிதித்துறை மீள் அமைத்தல்'' என்ற விடயம் தொடர்பாகப் பங்கேற்பாளர்களுக்கு உரை நிகழ்த்தினார். வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் என். எல். சிறிசேனா அவர்கள் ''நிதிக்கூட்டு நிலையங்களின் முகாமைத்துவ முறைகளைத் தரமுயர்த்தல்'' என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

மலேசியா, கோலாலம்பூரில் உள்ள தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய வங்கி ஆராய்ச்சி பயிற்சி நிலையத்துடன் இணைந்து வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் நிதி நிறுவனங்களின் பரீட்சிப்பு மற்றும் மேற்பார்வை மீதான தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் 15 ஆவது பயிற்சி நெறியை ஒழுங்கு செய்தது. இது 1990 சனவரி 29 இலிருந்து மாச்சு 2 வரையிலான காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஆதரவில் கொழும்பில் நடைபெற்றது. இப்பயிற்சிநெறி இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், பிலிப்பைன்சு, தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளின் மத்திய வங்கிகளின் 27 அலுவலர்களின் பங்கேற்பினைக் கொண்டிருந்தது.

## அபிவிருத்தி நிதி

1990 இல் நடுத்தரகால, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் நிருவாகம் மற்றும் சிறிய நடுத்தரக் கைத்தொழில்களுக்கான கொடுகடன் உத்தரவாதத்தின் தொழிற்பாடுகள் என்பன தொடர்ந்தும் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பொறுப்பாகவே இருந்தது.

### நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியம்

வகை II, III, IV மற்றும் இடருற்ற கைத்தொழில்களுக்கான சிறப்பு மீள் நிதியிடல் வசதிகள் என்பனவற்றின்கீழ் நடுத்தரகால நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழான மத்திய வங்கியின் மீள்நிதியிடல் ஒப்புதல்கள் 1989 இன் ரூ. 4,400 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 9,080 இலட்சமாக விளங்கின. 1990 இல் வகை II இன் கீழ் ஏற்றுமதிச் செயற்றிட்டங்களுக்கான மீள் நிதியிடல் ஒப்புதல்கள் 7 செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்டன. அணியும் ஆடைகள், இறால் வளர்ப்பு, கைப்பணிப் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கி இவற்றிற்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 230 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 29 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. சுற்றுலா உணவக விடுதிகள், மற்றும் வேளாண்மை என்பனவற்றிற்காக வழங்கப்பட்ட கடன்களின் ஒன்று சேர்ந்த வட்டி மூலதனமாக்கப்படல் தொடர்பாக ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கியினால் எத்தகைய மீள் நிதியிடலும் வழங்கப்படவில்லை. கைத்தொழில்களுக்கான ரூ. 720 இலட்சம் கொண்ட மீள் நிதியிடல் சுற்றி நெய்யப்படும் பருத்தி அலகு ஒன்றினதும் புடவை செயல் முறை அலகு ஒன்றினதும் நிறுவுதலை உள்ளடக்கியிருந்தது. ஏனைய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட

மீள் நிதியிடல் கடன்கள் ரூ. 260 இலட்சமாக விளங்கி இரண்டு தனியார் வைத்திய நிலையங்களினதும் வர்த்தகக் கட்டடமொன்றினதும் கட்டுமானத்தையும் உள்ளடக்கியிருந்தன. 1990 இல் ஒப்புதலளிக்கப்பட்ட மிகப் பெரிய மீள் நிதியிடலானது இடருற்ற கைத்தொழில்களுக்கு உதவுவதற்கானதாகக் காணப்பட்டதுடன் ரூ. 7,870 இலட்சமாகவும் விளங்கியது. நடுத்தரகால நீண்டகால மீள் நிதியிடல் ஒப்புதல்களின் பகுப்பொன்று அட்டவணை 2.5 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5

**நடுத்தர நீண்டகால் கொடுகடன் நிதியம்**
**(வகைகள் II—III—IVஇன் கீழான மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)**
**1988—1990**

(ரூபா பத்து இலட்சங்களில்)

| வகை | 1988 | | 1989 | | 1990 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை |
| II ஏற்றுமதித்துறை .. | 27.2 | 19.0 | 46.2 | 32.3 | 32.7 | 22.9 |
| IIIஉம் IVஉம் | | | | | | |
| (i) வேளாண்மை .. | 72.0 | 43.2(அ) | 14.7 | 8.8(அ) | — | — |
| (ii) கைத்தொழில் .. | 2.8 | 1.7 | 35.4 | 21.2 | 72.6 | 71.6 |
| (iii) சுற்றுலா விடுதிகள் | — | — | — | — | — | — |
| (iv) ஏனையவை .. | 15.0 | 15.0 | 80.0 | 80.0 | 43.5 | 26.1 |
| நலிவுற்ற கைத்தொழில்களுக்கான உதவி ... | 272.6 | 175.8(ஆ) | 463.1 | 298.2 (இ) | 787.4 | 787.4 |
| மொத்தம் | 389.6 | 254.7 | 639.4 | 440.5 | 936.2 | 908.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) நடுக்கா கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மரப்பயிர்ச் செயற்றிட்டங்களுக்காக இலங்கை வங்கிக்கு 1988இல் வழங்கப்பட்ட 4 கடன்களையும் 1989இல் வழங்கப்பட்ட ஒரு கடனையும் உள்ளடக்கும்.

(ஆ) இரண்டு சுற்றுலா விடுதிகளைப் புதுப்பிக்கவும், 13 சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீதான வட்டிகளின் நிலுவைகளை மூலதனமயப்படுத்தலுக்கும் வழங்கப்பட்ட இரண்டு கடன்களையும் உள்ளடக்கும்.

(இ) 27 சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டிகளின் நிலுவையை மூலதனமயப்படுத்தலையும் உள்ளடக்கும்.

1990 இல் சுற்றுலா கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, இலங்கைச் சுற்றுலா விடுதிகள் சங்கம் என்பன செய்த பிரதிநிதித்துவத்தையடுத்து மத்திய வங்கியின் நாணயச் சபை 1990 திசெம்பர் 6 இல் பின்வருவன தொடர்பாக நிதியிடல் திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளித்தது.

(1) இலங்கைச் சுற்றுலாச் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தற்போது தொழிற்பாட்டில் உள்ள சுற்றுலா விடுதிகளின் சொத்துக்களைப் புதுப்பித்தல் / பதிலீடு செய்தல். இந்நோக்கத்துக்காக ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியிடல் ரூ. 2,000 இலட்சமாகும்.

## 31-12-90 இல் உள்ளவாறான மத்திய வங்கிக் கொடுகடன்

| விடயம் / திட்டங்களும் ஆண்டுகளும் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் 1989 எண்ணிக்கை | 1989 பெறுமதி | 1990 எண்ணிக்கை | 1990 பெறுமதி | 1989 எண்ணிக்கை | 1989 பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் ... .. | 767 | 31.20 | 767 | 31.20 | 1670 | 286.10 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | (அ) 23.40 | 767 | (அ) 23'40 | 1670 | (ஆ) 157.50 |
| 2.1 முழுமையாக மீளச்செலுத்தப்பட்ட கடன்கள்... | 584 | 22.54 | 593 | 22.90 | 1142 | 148.59 |
| 2,2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலங்கடந்த உத்தரவாதங்கள் .. | 64 | 3.94 | 71 | 4.04 | 78 | 23.18 |
| **கோரல்கள்** | | | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக்கோரல்கள் .. | 83 | (எ) 4.29 | 88 | (எ) 4.32 | 320 | (எ) 72.22 |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்புக்கள் .. | — | 2.41 | — | 2.42 | — | 31.58 |
| **3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள்** | | | | | | |
| 3.3.1 முழுமையாக தீர்க்கப்பட்டவை .. | 57 | 1.66 | 63 | 1.68 | 216 | 17.32 |
| 3.3.2 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை (50%) ... | — | — | 01 | 0.004 | 27 | 1.95 |
| 3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் ... | 06 | 0.22 | 07 | 0.22 | 25 | 5.31 |
| 3.3.4 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் (எ) முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் | 16 | 0.24 | 16 | 0.24 | 35 | 1.52 |
| 3.3.5 பின்போடப்பட்ட கோரல்கள் (ஐ) .. | — | — | 01 | 0.27 | 11 | 2.34 |
| 3.3.6 நிலுவையிலுள்ள கோரல்கள் (ஐ) .. | 04 | 0.29 | — | — | 06 | 1.19 |
| 4.1 வெளிநிற்குப் கடன்கள் (1.1—2.1—2.2—3.3.1—3.3.2-3.3.3) ... | 56 | (ஒ) 1.43 | 32 | (ஒ) 1.14 | 182 | (ஒ) 25.77 |
| 4.2 (இதில் நிலுவையில் உள்ளவை) .. | 56 | (ஒ) 1.43 | 32 | (ஒ) 1.14 | 154 | (ஒ) 22.14 |
| 4.3 வெளிநின்ற உத்தரவாதங்கள்மீதான மத்திய வங்கியின் பொறுப்பு .. | 56 | (அ) 1.07 | 32 | (அ) 0.86 | 182 | (ஆ) 15.01 |
| 5. கட்டணச் சேகரிப்புக்கள் .. | — | 0.91 | — | 0.92 | — | 11.63 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீளப் பெறுகைகள் ... | — | 0.16 | — | 0.36 | — | 1.15 |

(அ) 75 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள்

(ஆ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக கூடியது ரூ. 400,000/- இனை வரையறையாகக் கொண்டு வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(இ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இனையும் ரூ. 2,000,000 இற்கும் ரூ. 4,000,000 இற்கும் இடைப்பட்ட கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ. 1,200,000 இனையும் உச்ச எல்லையாகக் கொண்டு வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(IF) ரூ. 2,000,000, ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 3,000,000, ரூ. 3,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 1,600,000 என்ற அடிப்படையில் முறையே 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம்.

## உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பு

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

| சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்-I | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்–II | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் III | | | |
| 1990 | | 1989 | | 1990 | | 1989 | | 1990 | |
| எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1670 | 286.10 | 2531 | 1,392.54 | 2531 | 1,392.54 | 1057 (உ) | 636.95 | 2340 (ஊ) | 1,383.23 |
| 1670 | 157.50 (ஆ) | 2531 | 713.63 (இ) | 2531 | 713.63 (இ) | 1047 | 440.07 (ஈ) | 2340 | 955.88 (ஈ) |
| 1189 | 168.69 | 230 | 51.97 | 487 | 149.90 | 3 | 4.41 | 12 | 7.81 |
| 85 | 24.51 | 180 | 105.65 | 238 | 129.95 | 14 | 4.55 | 97 | 74.91 |
| 327 | 73.30 (எ) | 110 | 63.51 (எ) | 144 | 66.25 (எ) | — | — | 03 | 1.35 (எ) |
| — | 31.73 | — | 27.31 | — | 36.17 | — | — | — | 0.89 |
| 220 | 17.62 | 48 | 8.26 | 76 | 18.73 | — | — | 01 | 0.01 |
| 28 | 2.11 | 09 | 0.87 | 08 | 0.82 | — | — | — | — |
| 26 | 4.72 | 19 | 3.59 | 32 | 7.61 | 01 | 0.56 | 01 | 0.56 |
| 37 | 2.03 | 02 | 0.58 | 02 | 0.58 | — | — | — | — |
| 12 | 3.04 | 16 | 5.34 | 22 | 6.54 | — | — | 01 | — |
| 04 | 0.09 | 16 | 7.80 | 04 | 1.07 | — | — | — | — |
| 122 | 17.76 (ஒ) | 2045 | 812.38 (ஒ) | 1690 | 604.61 (ஒ) | 739 | 347.12 (ஒ) | 1883 | 975.58 (ஒ) |
| 117 | 17.02 (ஒ) | 548 | 267.62 (ஒ) | 739 | 192.51 (ஒ) | 48 | 1.52 (ஒ) | 181 | 18.02 (ஒ) |
| 122 | 10.32 (ஆ) | 2045 | 445.06 (இ) | 1690 | 337.69 (இ) | 739 | 198.73 (ஈ) | 1883 | 604.70 (ஈ) |
| — | 11.84 | — | 18.43 | --- | 22.69 | — | 2.14 | — | 8.32 |
| — | 2.75 | — | 0.04 | — | 0.67 | — | — | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(உ) 1989 இறுதிவரை இவை பகிர்ந்தளிக்கப்பட்டதென அறிவிக்கப்படாத ரூ. 2,594 இலட்சத்தினைக் கொண்ட 290 கடன்களையும் உள்ளடக்கும்.

(ஊ) 1990 இறுதிவரை பகிர்ந்தளிக்கப்பட்டதென அறிவிக்கப்படாத ரூ. 2,208 இலட்சத்தினைக்கொண்ட 346 கடன்களையும் உள்ளடக்கும்.

(எ) ஒன்றுசேர்ந்த வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்படாத தொகை.

(ஏ) 2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஐ) 4.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஒ) மீளப்பெறப்பட்ட தவணைப் பணம் நீங்கலாக.

(2) சுற்றுலாவினரின் போக்குவரத்துக்காக 30 அல்லது அதற்கு மேற்பட்ட இருக்கை வசதிகளைக் கொண்ட பேருந்துகள் / சொகுசு வண்டிகளின் இறக்குமதி. இந்நோக்கத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்ட மீளளிப்பு, ரூ. 1,000 இலட்சமாகும்.

மேற்கூறப்பட்ட நோக்கங்கள் தொடர்பான மீளளிப்பு நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை IV இன் கீழ் வழங்கப்படுவதுடன் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எல்லாக் கொடுகடன் நிறுவனங்களுக்கும் 1990 திசெம்பர் 14 இல் வழங்கப்பட்டுள்ளன. எனினும், 1990 ஆம் ஆண்டின்போது மீளளிப்புக்கான விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

**கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்**

மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் நான்கு கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழான கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் 1990 திசெம்பர் 31 இன்படியான தொகுப்பு அட்டவணை 2.6 இல் தரப்பட்டுள்ளது.

**சிறு அளவுக் கைத்தொழில்கள் திட்டம்**

1978 இல் தொடங்கப்பட்ட சிறிய அளவுக் கைத்தொழில் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் உத்தரவாதங்களின் வழங்கல் 1981 இல் பூர்த்தியாக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மொத்தமான 767 கடன்களில் ரூ. 230 இலட்சம் கொண்ட 593 கடன்கள் முற்றாக மீளச் செலுத்தப்பட்டவேளையில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையால் 1990 இறுதியில் ரூ. 40 இலட்சம் கொண்ட 71 உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. இதேவேளை 1990 இறுதியில் ரூ. 24 இலட்சம் பொறுப்புக்களைக் கொண்ட 88 கோரல்கள் பெறப்பட்டன. இதில் ரூ. 17 இலட்சம் கொண்ட 63 கோரல்கள் தீர்க்கப்பட்ட வேளையில் ஒரு கோரல் தொடர்பாக மத்திய வங்கியின் 50 சதவீதத்தை விஞ்சாத இடைக்காலக் கொடுப்பனவாக ரூ. 400,000 கொண்ட தொகை செலுத்தப்பட்டது. மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 2.2 இலட்சம் கொண்ட 7 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. ரூ. 2.4 இலட்சம் பெறுமதியான மத்திய வங்கிப் பொறுப்பினைக் கொண்ட 16 கோரல்கள் தொடர்பான கடன்கள் கோரல் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் கடன் பெற்றவர்களால் முற்றாக மீளச் செலுத்தப்பட்டன. இதேவேளை பங்குபற்றும் கொடுகடன் நிறுவனத்தினால் கடன் மீள அட்டவணைப்படுத்தப்பட்டமை காரணமாக ரூ. 2.7 இலட்சம் கொண்ட ஒரு கோரல் பிற்போடப்பட்டது. 1990 இறுதியில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களிடமிருந்து இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ரூ. 9.2 இலட்சமாக விளங்கிய வேளையில் மத்திய வங்கியினால் இதே நாளில் மீளப்பெறப்பட்ட கோரல்களுக்குப் பிந்திய தொகை ரூ. 3.6 இலட்சமாக விளங்கியது.

### சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம்—I

1979 இல் தொழிற்படத் தொடங்கிய சிறிய நடுத்தரக் கைத்தொழிற் றிட்டம் I, 1982 இல் பூர்த்தியாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 2,860 இலட்சம் கொண்ட கடனை உள்ளடக்கும் 1,670 உத்தரவாதங்கள் வழங்கப் பட்டன. உத்தரவாதமளிக்கப்பட்ட இக்கடன்களில் 1,189 கடன்கள் முற்றாக மீளச் செலுத்தப்பட்டன. பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கி யின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 245 இலட்சம் கொண்ட 85 உத்தரவாதங்கள் 1990 இறுதியில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1990 இறுதியில் ரூ. 317 இலட்சம் பொறுப்பைக் கொண்ட 327 கோரல்கள் பெறப்பட்டன. இதில் ரூ. 176 இலட்சம் கொண்ட 220 கோரல்கள் தீர்க்கப்பட்ட வேளையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரல்களைச் செயற்றிட்ட பரிசோதனை இல்லாமலே தீர்ப்பதென எடுக்கப் பட்ட தீர்மானத்திற்கு அமைய மத்திய வங்கியின் பொறுப்பில் 50 சதவீதத்தினை விஞ்சாத இடைக்காலக் கொடுப்பனவாகிய ரூ. 21 இலட்சம் கொண்ட தொகை 28 கோரல்களின் பேரில் செலுத்தப்பட்டது. பங்குபற்றும் கொடுகடன் நிறு வனங்கள் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையால் ரூ. 47 இலட்சம் கொண்ட 26 கோரல்கள் நிராகரிக்கப்பட்ட வேளையில் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின் ரூ. 20 இலட்சம் கொண்ட 37 கோரல்கள் தொடர்பான கடன்கள் கடன் பெற்றவர்களால் மீளச் செலுத்தப்பட்டன. ஒன்றில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித்திட்டம் காரணமாக அல்லது கடன் பெற்றவர் கடனை மீளச் செலுத்துவதனை மீண்டும் தொடங்குதல் காரணமாக ரூ. 30 இலட்சம் கொண்ட 12 கோரல்கள் பற்றிய தீர்மானம் பிற்போடப்பட்டது. 1990 இறுதியில் இத் திட்டத்தின்கீழ்ச் சேகரிக்கப் பட்ட மொத்தக் கட்டணம் ரூ. 118 இலட்சமாக விளங்கிய வேளையில் கோரல் களுக்குப் பிந்திய மத்திய வங்கியின் மீளப் பெறுகைகள் அந்நாளில் ரூ. 28 இலட்சமாக விளங்கின.

### சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம்—II

1982 இல் தொழிற்படத் தொடங்கிய சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II இன் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்கள் 1989 இல் பூர்த்தியாக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் உத்தரவாதமளிக்கப்பட்ட 2,531 கடன்களில் ரூ. 1,500 இலட்சம் பெறுமதி கொண்ட 487 கடன்கள் முற்றாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 1,300 இலட்சம் கொண்ட 238 உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. இதேவேளை 1990 இறுதியில் ரூ. 360 இலட்சம் பொறுப்புக் கொண்ட 144 கோரல்கள் பெறப்பட்டன. இதில் ரூ. 187 இலட்சம் பெறுமதி கொண்ட 76 கோரல்கள் தீர்க்கப்பட்ட வேளையில் முன்பு கூறப்பட்ட தீர்மானத்திற்கு அமைய வடக்கு, கிழக்கு மாகா ணங்களிலிருந்து பெறப்பட்ட 8 கோரல்களின் பேரில் மத்திய வங்கியின் மொத்தப் பொறுப்பில் 50 சதவீதத்தை விஞ்சாத இடைக்காலக் கொடுப்பனவாக ரூ. 8 இலட்சம் செலுத்தப்பட்டது. பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் தொழிற் பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 76 இலட்சம் கொண்ட முப்பத்தியிரண்டு கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. மத்திய வங்கிக்குக்

கோரல்களைச் சமர்ப்பித்த பின்னர் 2 கோரல்கள் தொடர்பான கடன்கள் கடன் பெற்றவர்களால் மீளச் செலுத்தப்பட்டன. ஒன்றில் பங்குபற்றும் கடன் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் அல்லது கடன் பெற்றவர்கள் மீளச் செலுத்துவதை மீண்டும் தொடங்குதல் காரணமாக ரூ. 65 இலட்சம் கொண்ட 22 கோரல்கள் தொடர்பான தீர்மானம் பிற்போடப் பட்டது. 1990 திசெம்பர் 31 இல் இத்திட்டத்தின் கீழான மொத்தக் கட்டணச் சேகரிப்பு ரூ. 226 இலட்சமாக விளங்கியவேளையில் மத்திய வங்கியின் கோரலுக் குப் பிந்திய மீளப் பெறுகைகள் இதே நாளில் ரூ. 6.7 இலட்சமாக விளங்கின.

## சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம்—III

1988 யூலையில் தொழிற்படத் தொடங்கிய சிறிய, நடுத்தரக் கைத் தொழிற் திட்டம்—III, 1990 இறுதியில் ரூ. 13,830 இலட்சம் கொண்ட 2,340 கடன்களுக்கு உத்தரவாதம் அளித்தது. இவற்றில் ரூ. 78 இலட்சம் கொண்ட 12 கடன்கள் முற்றாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 749 இலட்சம் கொண்ட 97 கடன்கள் தொடர்பான உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. ரூ. 8.9 இலட்சம் பெறுமதியான மத்திய வங்கிப் பொறுப்பைக் கொண்ட 3 கோரல்கள் 1990 இறுதியில் பெறப்பட்டன. இதில் ரூ. 0.1 இலட்சம் கொண்ட ஒரு கோரல் தீர்க்கப்பட்ட வேளையில் ரூ. 5.6 இலட்சம் கொண்ட இன்னுமொரு கோரல் நிராகரிக்கப்பட்டது. 1990 திசெம்பர் 31 இல் இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ரூ. 83 இலட்சமாகும்.

இவ்வாண்டில் குருநாகல், கேகாலை கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் வரையறுக்கப்பட்ட சேலான் வங்கியும் தேசிய அபிவிருத்தி வங்கியுடனான பங்கு பற்றும் உடன்படிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் ஏற்கெனவேயுள்ள பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களான இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நஷனல் வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி போன்றவற்றுடன் மேலதிகமாக மத்திய வங்கியின் கொடுகடன் உத்தர வாதத் திட்டத்தின்கீழ்ச் சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன்களை வழங்கு வதற்குத் தகுதிபெற்றன.

சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II, III என்பவற்றின்கீழ் நிதி யிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில் வாரியான பகுப்பு அட்டவணை 2.7 இல் தரப்பட்டுள்ளது.

சிறிய, நடுத்தர முதலீட்டு உத்தரவாத நிதியத்தின் திறைசேரி உண்டியல்கள் மீதான மொத்த வெளிநின்ற முதலீடு 1990 இறுதியில் ரூ. 1,898 இலட்சமாக விளங்கிய வேளையில் இவ்வாண்டில் பெறப்பட்ட மொத்த வட்டி வருமானம் ரூ. 280 இலட்சமாக விளங்கியது.

அட்டவணை 2.7

## சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II, III இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்— கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 1990 திசெம்பர் 31 இல் உள்ளபடி

( ரூ. '000 )

| திட்டம் / கைத்தொழில் | சிறிய நடுத்தரக்கைத்தொழில் II, III 1982—1990 — வழங்கப்பட்ட கடன் எண்ணிக்கை | % | கடன் தொகை தொகை | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை தொகை | % | சிறியநடுத்தரக்கைத்தொழில் III 1988—1990 — வழங்கப்பட்ட கடன் எண்ணிக்கை | % | கடன் தொகை தொகை | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை தொகை | % | சிறியநடுத்தரக்கைத்தொழில் III 1990 — வழங்கப்பட்ட கடன் எண்ணிக்கை | % | கடன் தொகை தொகை | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை தொகை | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உணவு பதனிடல் .. | 1,329 | 27.3 | 774,351 | 27.9 | 437,021 | 26.2 | 491 | 21.0 | 321,214 | 23.2 | 205,788 | 21.5 | 277 | 21.4 | 170,125 | 22.8 | 110,608 | 21.4 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் .. | 120 | 2.5 | 56,362 | 2.0 | 36,092 | 2.1 | 71 | 3.0 | 33,339 | 2.3 | 24,359 | 2.6 | 47 | 3.6 | 24,818 | 3.3 | 18,175 | 3.5 |
| 3. இறப்பர் உற்பத்திகள் .. | 135 | 2.8 | 121,492 | 4.4 | 68,899 | 4.1 | 62 | 2.7 | 66,421 | 4.8 | 41,637 | 4.4 | 20 | 1.6 | 23,255 | 3.1 | 14,374 | 2.8 |
| 4. உலோக உற்பத்திகள் .. | 454 | 9.3 | 213,202 | 7.7 | 128,315 | 7.7 | 211 | 9.0 | 96,547 | 7.0 | 69,573 | 7.3 | 120 | 9.3 | 50,092 | 6.7 | 37,674 | 7.3 |
| 5. கட்டடவாக்கப் பொருட்கள் | 410 | 8.4 | 209,130 | 7.5 | 142,090 | 8.5 | 249 | 10.6 | 119,130 | 8.6 | 92,585 | 9.7 | 148 | 11.5 | 68,783 | 9.2 | 54,526 | 10.6 |
| 6. கட்டடவாக்க ஒப்பந்தம் .. | 59 | 1.2 | 46,110 | 1.7 | 26,988 | 1.6 | 31 | 1.5 | 11,910 | 0.9 | 9,528 | 1.0 | 19 | 1.5 | 5,849 | 0.8 | 4,679 | 0.9 |
| 7. மர உற்பத்திகள் .. | 340 | 7.0 | 128,931 | 4.6 | 85,201 | 5.1 | 173 | 7.4 | 71,256 | 5.2 | 53,151 | 5.6 | 99 | 7.6 | 34,846 | 4.7 | 25,717 | 5.0 |
| 8. ஆடைகள் .. | 349 | 7.2 | 252,703 | 9.1 | 158,180 | 9.5 | 218 | 9.3 | 179,494 | 13.0 | 121,792 | 12.7 | 143 | 11.1 | 128,531 | 17.2 | 87,182 | 16.9 |
| 9. புடவைகள் .. | 109 | 2.2 | 91,103 | 3.3 | 51,205 | 3.1 | 54 | 2.3 | 45,329 | 3.3 | 28,083 | 2.9 | 31 | 2.4 | 27,863 | 3.7 | 16,630 | 3.2 |
| 10. தொழிற்கூடத் திருத்தல் | 189 | 3.9 | 76,574 | 2.7 | 49,899 | 3.0 | 87 | 3.7 | 36,097 | 2.6 | 27,240 | 2.8 | 42 | 3.2 | 19,919 | 2.7 | 14,698 | 2.8 |
| 11. பல்வகை .. | 1,377 | 28.2 | 805,815 | 29.1 | 485,618 | 29.1 | 693 | 29.7 | 402,496 | 29.1 | 282,142 | 29.5 | 347 | 26.8 | 192,244 | 25.8 | 132,041 | 25.6 |
| மொத்தம் .. | 4,871 | 100.0 | 2,775,773 | 100.0 | 1,669,508 | 100.0 | 2,340 | 100.0 | 1,383,233 | 100.0 | 955,878 | 100.0 | 1,293 | 100.0 | 746,325 | 100.0 | 516,304 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதித்தலும்

தேவையான வேளைகளில் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டங்களின்கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதனை செய்வதும் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினால் செய்யப்பட்ட கோரல்களைத் தீர்ப்பனவு செய்வதும் இவ் ஆண்டில் தீவிரப்படுத்தப்பட்டன. 1990 இல் கொழும்பு, கம்பகா, புத்தளம், இரத்தினபுரி, பதுளை, குருநாகல் மாவட்டங்களிலுள்ள 168 செயற்றிட்டங்கள் பரிசோதிக்கப்பட்டன.

## பேருந்துக் கொள்வனவுக் கடனுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளர்களுக்குப் பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காகப் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு 1990 நவெம்பர் 22 இல் நாணயச் சபை கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை வழங்க ஒப்புதலளித்தது. இக் கடன்கள் தேசிய அபிவிருத்தி வங்கியினால் உலக வங்கியின் பொருளாதார மீளமைப்புக் கொடுகடன் வசையில் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து பேருந்தின் பெறுமதியில் ஆகக்கூடியது 75 சதவீதம் வரையில் மீள் நிதியிடப்படும். இவ் உத்தரவாதத் திட்டத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும் பின்வருவன நீங்கலாகச் சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டத்தினை ஒத்ததாகவே அமையும்.

(அ) உத்தரவாதத்திற்கான கட்டணம் ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் செலுத்தப்பட வேண்டும். இது ஒவ்வொரு உடன் முந்திய ஆண்டின் இறுதியிலும் கடன் கணக்கில் உத்தரவாதமளிக்கப்பட்டு வெளிநின்ற தொகையின் 1 சதவீதம் கொண்ட தொகையாக அமையும்.

(ஆ) ஈட்டுப் பிணை நிறைவேற்றப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றையும், ஈட்டுப் பிணைகள் பொருத்தமான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதற்கான குறிப்புடன் ஊர்தியின் பதிவுக்கான சான்றிதழ் ஒன்றையும் கடன் பகிர்ந்தளிக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்கு உத்தரவாதக் காப்புக்கான பணம் உட்பட்டதாகும். கடன் முழுமையாக மீளச் செலுத்தப்படும்வரை பதிவுச் சான்றிதழ் அவர்களினால் தடுத்து வைக்கப்படும் என்ற உறுதிக் கூற்று ஒன்றினைச் சமர்ப்பிக்கும்படியும் பங்கேற்கும கொடுகடன் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளபபடுகின்றன.

(இ) சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டங்களின் விடயத்தினைப் போலன்றி, பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறு மீளப்பெறும் நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் சந்தர்ப்பங்களில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள் அத்தகைய கொடுப்பனவுகளை மீளச் செலுத்துமென்ற நிபந்தனைகளைக் கொண்ட உத்தரவாதத்தின் கீழ் சமர்ப்பிக்கும் கோரல் விண்ணப்பங்களின் மீது மத்திய வங்கியின் பொறுப்பில் 50 சதவீதத்தினை விஞ்சாத தொகையொன்றினை மத்திய வங்கி பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்குச் செலுத்தும்.

(ஈ) பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்கள், மத்திய வங்கி ஆகிய இரண்டினதும் ஒப்புதல்கள் இன்றி பேருந்துகளின் உரிமை மாற்றப்படுமாயின் உத்தரவாதத்தின் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு காலாவதியாகும்.

கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் மத்திய வங்கி தாங்கிக்கொள்ள வேண்டியிருந்த உயர் இடர்களுக்கு எதிரானதொரு பாதுகாப்பாக இம் மேலதிக நிபந்தனைகள் மதிக்கப்பட்டன. இத் திட்டத்தின் கீழான மத்திய வங்கியின் பொறுப்பினை ஈடுசெய்வதற்காக மத்திய வங்கியின் பொது ஒதுக்கிலிருந்து ரூ. 220 இலட்சம் கொண்டதொரு தொகையை மாற்றுவதற்கு நாணயச்சபை ஒப்புதல் வழங்கியது.

## தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

நாட்டின் குழப்ப நிலைமைகளின் காரணமாக 1989 இல் இடைநிறுத்தப் பட்டிருந்த தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1990 இல் மீண்டும் தொடங்கியது. இதன்படி இவ்வாண்டில் மூன்று நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. பள்ளிக்கூடங்களிலிருந்து விலகுவோரிடையேயும் சனசக்தி நன்மை பெறுவோர் இடையேயும் சுயதொழில் வாய்ப்புக்கள் பற்றிய அறிவினை ஊட்டும் நோக்குடன் இரு நிகழ்ச்சித் திட்டங்கள் நுவரேலியா, மாத்தளை மாவட்டங்களில் நடத்தப்பட்டன. 1990 யூலையில் நுவரெலியா மாவட்டத்தில் நடத்தப்பட்ட முதல் நிகழ்ச்சித் திட்டத்தில் 100 பங்குபற்றுநர்கள் பங்குபற்றிய வேளையில் 1990 ஒத்தோபரில் கலேவெலயில் நடத்தப்பட்ட இரண்டாவது நிகழ்ச்சித் திட்டத்தில் 125 பங்குபற்றுநர்கள் கலந்துகொண்டனர். தற்போதுள்ள ஆடைத் தயாரிப்புக் கைத்தொழில்களின் முகாமைத்துவ மற்றும் தொழில் நுட்பங்களின் தரமுயர்த்தலை நோக்கமாகக் கொண்ட மூன்றாவது நிகழ்ச்சித் திட்டம் 1990 திசெம்பரில் கண்டி மாவட்டத்தில் நடாத்தப்பட்டதுடன் இதில் 30 ஆடைத் தயாரிப்புக் கைத்தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். இவ்வனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவியுடனேயே நடத்தப்பட்டன.

## கிராமியக் கொடுகடன்

வெளிநாட்டு முகவர் நிலையங்களினால் நிதியிடப்பட்ட பின்வரும் கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் 1990 இல் வங்கி தொடர்ந்தும் கொடுகடன் நிறைவேற்று முகவராக அதன் பங்கையாற்றியது.

(1) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிருண்டி ஓயா நீர்ப்பாசனக் குடியேற்றச் செயற்றிட்டம்—கட்டம் II.

(2) வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(3) வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(4) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட மாத்தளை—புத்தளம் மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(5) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(6) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(7) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம்.

செயற்றிட்ட காலப்பகுதியான 1983—1987 பகுதியில் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட மூல ஒதுக்கத்தில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் செயற்றிட்ட நிதியத்தினைப் பயன்படுத்தும் பொருட்டு பதுளை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் தொழிற்பாடுகள் 1992 யூலை 31 ஆம் நாள் வரையான மேலுமொரு இரண்டாண்டு காலப்பகுதிக்கு மூன்றாவது முறையாக நீடிக்கப்பட்டது.

1981 யூன் 29 ஆம் நாளன்று தொடங்கிய மாத்தளை—புத்தளம் மாவட்டங்களின் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம், ஒன்பது ஆண்டுகள் செயற்றிட்டக் காலத்தின் இறுதியில் 1990 யூன் 30 ஆம் நாளன்று பூர்த்திசெய்யப்பட்டது.

கிராமிய கொடுகடனின் பரந்தளவிலான தொழிற்பாடுகளின் மதிப்பீடுகளைப் பெறும்பொருட்டும், பொருத்தமான கொள்கைகளையும், நடைமுறைகளையும் வடிவமைப்பதில் இந் நிறுவனங்களுக்கு உதவும் வகையிலும் வங்கி, தொடர்ந்தும் வர்த்தக வங்கிகளின் தெரிந்தெடுக்கப்பட்ட கிளைகளின் வேளாண்மைக் கடன்களின் பட்டியல்களையும் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் பொது வேலைகளையும் சோதனை செய்தது.

1990 இல், மத்திய வங்கியின் உள்நாட்டு உண்டியல் திட்டத்தின்கீழ் மத்திய வங்கி ரூ. 260 இலட்சம் கொண்ட பத்தொன்பது ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் எல்லைகளுக்கு ஒப்புதலளித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட எல்லைகளில், மூன்று வாங்கப்பட்ட தேயிலை இலைத் தொழிற்சாலைகளில் இவ்வசதியைப் பயன்படுத்தியதுடன் 693,538 கிலோக்கிறாம் பச்சைத் தேயிலையைப் பதனிட்டமைக்கு நிதி வழங்கும் பொருட்டு ரூ. 60 இலட்சம் கொண்ட உள்நாட்டு உண்டியல்களை வழங்கின.

வங்கி, இலங்கையிலுள்ள ஆசிய பசுபிக் பிரதேச வேளாண்மைக் கொடுகடன் அமைப்பின் மூன்று அங்கத்துவ நிறுவனங்களுடன் சேர்ந்து 1990 ஒகத்தில் ஆசிய பசுபிக் பிரதேச வேளாண்மைக் கொடுகடன் அமைப்பின் 23 ஆவது நிருவாகக் குழுக் கூட்டத்தை ஒழுங்கு செய்தது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

கிராமப் பகுதிகளில் வேளாண்மை, குடிசை மற்றும் சிறு கைத்தொழில், மீன்பிடிக் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு நிதியுதவி அளிப்பதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1985 இன் எண் 15 கொண்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 1990 ஆம் ஆண்டில் தமது நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தின.

### பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கிளை விரிவாக்கம்

பன்னிரண்டாவது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி பதுளை நிருவாக மாவட்டத்தில் 1990 ஒத்தோபர் 13 இல் மத்திய வங்கியால் நிறுவப்பட்டது பிரதேச கிராமிய வங்கிகளின் எண்ணிக்கையை 12இற்கு உயர்த்தியது. அத்துடன் 1990 ஆம் ஆண்டில் பதுளை (பதுளை, வெலிமடை, தியத்தலாவ, பசறை), குருனாகல் (இப்பாகமுவ), அம்பாந்தோட்டை (சூரியவேவா), புத்தளம்

அட்டவணை 2.8

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளையமைப்பு

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்சியின் பெயர் | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்சி நிறுவிய திகதி | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | | | 1990 இறுதியில் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | |
| களுத்துறை | 85.07.13 | புளத்சிங்கள | 4 | 3 | 4 | 1 | — | — | 12 |
| மாத்தறை | 85.07.28 | மாத்தறை | 5 | 2 | — | 1 | — | — | 8 |
| குருநாகல் | 85.08.10 | குளியாப்பிட்டி | 6 | 4 | 2 | 1 | 1 | 1 | 15 |
| அநுராதபுரம் | 85.06.12 | மிங்கிதலை | 2 | 4 | 1 | — | — | — | 7 |
| அம்பாந்தோட்டை | 86.12.13 | அம்பாந்தோட்டை | — | 2 | 2 | 2 | — | 1 | 7 |
| கேகாலை | 87.02.08 | கேகாலை | — | — | 8 | 1 | 2 | — | 10* |
| புத்தளம் | 87.07.11 | சிலாபம் | — | — | 5 | 1 | — | 2 | 8 |
| காலி | 87.08.17 | எல்பிட்டிய | — | — | 1 | 7 | 1 | — | 9 |
| கண்டி | 87.10.03 | கம்பளை | — | — | 6 | 3 | — | 1 | 10 |
| நுவரெலியா | 88.10.10 | நுவரெலியா | — | — | — | 1 | 3 | 2 | 6 |
| மொனராகலை | 88.10.11 | புத்தளை | — | — | — | 1 | 2 | 1 | 4 |
| பதுளை | 90.10.13 | பதுளை | — | — | — | — | — | 4 | 4 |
| மொத்தம் | — | — | 17 | 15 | 29 | 19 | 9 | 12 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்சி.

* 1990 இல் கேகாலை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்சியின் பனாவல, ருவன்வெல்ல கிளைகள் ஒன்றிணைக்கப்பட்டமையினால் கிளைகளின் எண்ணிக்கை ஒன்றினால் குறைந்தது.

(முந்தல், நவகத்தேகம), கண்டி (சட்டுகஸ்தோட்டை), நுவரெலியா (நில்தேன்தகின்ன, அக்கரப்பத்தனை), மொனராகலை (தனமல்விலா) ஆகிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் 12 கிளைகளும் திறக்கப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களுக்காக 1990 இல் கேகாலைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பனாவல கிளை அதன் ருவான்வெல கிளையுடன் இணைக்கப்பட்டது. இதன்படி 1989 இன் இறுதியில் 89 ஆகவிருந்த பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 1990 இன் இறுதியில் 100 ஆக உயர்வடைந்தது. 1985 இலிருந்து இடம்பெற்ற பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகள் என்பவற்றின் விரிவாக்கம் தொடர்பான தரவுகள் அட்டவணை 2.8 இல் தரப்பட்டுள்ளன.

**வைப்புத் திரட்டல்**

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வைப்புத் திரட்டலில் 1990 இல் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. மொத்த வைப்புக்கள் 1989 இன் இறுதியில் 199,559 கணக்குகள் மீதான ரூ. 1,760 இலட்சத்திலிருந்து 1990 இன் இறுதியில் 309,616 கணக்குகளின் மீது ரூ. 3,140 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. முன்னைய ஆண்டின் 55 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது வைப்புத் திரட்டலில் 78 சதவீத ஆண்டு வளர்ச்சியை வெளிப்படுத்தியது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பானது முன்னர் வங்கித்தொழில் முறையினைக் கொண்டிராத அல்லது குறைவாகக் கொண்டிருந்த பிரதேசங்களில் செயற்படும் ஒவ்வொரு வங்கியும் குறிப்பிட்ட அப் பிரதேசங்களில் கிராமிய மக்களுக்கிடையில் சேமிப்புப் பழக்கத்தினை மேம்படுத்துவதில் மேற்சொண்ட முயற்சியினையும் புதிய கிளைகளின் செயற்பாட்டின் மூலமான பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி வசதிகளின் விரிவாக்கத்தினையும் பிரதிபலித்தது. அண்மிய கடந்த காலங்களில் நிலவிய பொதுவான போக்கின் தொடர்ச்சியாகப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்தச் சேமிப்புக்களில் கிட்டத்தட்ட 86 சதவீதத்திற்குச் சேமிப்பு வைப்புக்கள் வகைகூறியவேளையில் நிலையான மற்றும் ஏனைய சேமிப்பு வைப்புக்கள் என்பன மிகுதியான 14 சதவீதத்திற்கு வகைகூறின.ஒவ்வொரு கணக்கிற்குமான சராசரி வைப்புப் பெறுமதி 1989 இன் ரூ. 882 இலிருந்து 1990 இல் ரூ. 1,014 இற்கு அதிகரித்தமை கிராமிய மக்களிடையே சேமிக்கும் மனப்பாங்கு அதிகரித்துச் செல்வதைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் சேமிப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்களின் ஒவ்வொரு தனிக் கணக்கிற்குமான சராசரி வைப்புப் பெறுமதி ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருப்பது இவ் வங்கிகள் கிராமியத் துறையின் வறிய மக்கட் பிரிவினரை நோக்கிச் சென்றிருப்பதனைக் காட்டுகின்றது. இந்தச் சாதகமான போக்கினை உறுதிப்படுத்தும் வகையில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் ஒவ்வொரு கிளைக்குமான சராசரி வைப்புக்கள் 1989 இன் ரூ. 20 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 31 இலட்சத்திற்கு அதிகரித்தது.

## கொடுகடன் வழங்கல்

நாட்டில் நிலவும் சார்புரீதியில் அமைதியான நிலைமைகளுடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கடன் தொழிற்பாடுகள் 1990 ஆம் ஆண்டில் ஒரு கணிசமான விரிவாக்கத்தினைக் காட்டின. 1990 ஆம் ஆண்டில் வழங்கப் பட்ட கடன்களின் எண்ணிக்கை 20,640 இலிருந்து 47,616 இற்கும், வழங்கப் பட்ட கடன்களின் பெறுமதி ரூ. 1,550 இலட்சத்திலிருந்து ரூ. 4,300 இலட்சத் திற்கும் அதிகரித்தன. 1990 இல் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது குறிப்பாகச் சனசக்திப் பயன் பெறுநர் களுக்குப் புதிய சுயதொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்கெனச் சிறப்பாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான கடன்களின் முக்கிய காரணமாக ஏற்பட்டதெனலாம். இது, கிராமிய துறைக்குக் கடன் வழங்கும் நடவடிக்கையில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தொடர்ச்சியாகவும், அதிகரித்த அளவிலும் பங்குபற்றுவதனை வெளிப்படுத்தியது. கடன்களின் சராசரி அளவு 1989 இன் ரூ. 7,493 இலிருந்து 1990 இல் ரூ. 9,026 இற்கு அதிகரித்தவேளையில் ஒரு கிளைக்கான சராசரிக் கொடுகடன் 1989 இன் ரூ. 17 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 43 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. அத்துடன் தங்கத்திலான பொருட் களைப் பிணையாகப் பெற்று (அடகுபிடித்தல்) அவற்றுக்கெதிராக வழங்கப்பட்ட கடன்களின் மொத்தம் 1989 இன் ரூ. 350 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 940 இலட்சமாக விளங்கி 166 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஆயினும் சில பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் முக்கியமாகப் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அடகுபிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கள் தொடர்ந்தும் வேளாண்மை, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, சிறு கைத் தொழில்கள், வியாபாரம் என்பவை உள்ளிட்ட பரந்துபட்ட பல்வேறு பொரு ளாதார நடவடிக்கைகளுக்கும் கடனுதவியளித்தன. 1990 ஆம் ஆண்டில் மொத் தக் கடன்களின் ஆகக்கூடிய விகிதாசாரம் வேளாண்மைத் துறைக்கு (65 சதவீதம்) பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில் வியாபாரமும் வர்த்தகமும் மற்றும் சிறு கைத் தொழில்கள் ஆகிய துறைகளுக்கு மொத்தக் கடனில் முறையே 11 சதவீதம், 10 சதவீதம் என்பன பகிர்ந்தளிக்கப்பட்டன.

## ஏனைய நடவடிக்கைகள்

ஆய்விற்குரிய காலப்பகுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிதியிடல் மூலம் சுயதொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தல், வேளாண்மையாளர் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல், வேளாண்மையாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த உதவியளித்தல், வளங்களின் கிடைப்பனவு தொட ர்பான தரவுகளைத் திரட்டுதல் போன்ற துறைகளில் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தின. அத்துடன் அரசால் ஆதரவளிக்கப்பட்ட மற்றும் வெளிநாட்டு நிதியிடலின் மூலமான பல்வேறு கொடுகடன் திட்டங்களின் கீழ் கிராமிய துறையின் அடிமட்டத்திலுள்ளவர்களுக்குக் கடன் வழங்குவதில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் முக்கிய பங்கினை ஆற்றின. சனசக்தித் திட்டம், வேளா ண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மை ஆகியவற்றால் நிதிப்படுத்தப்பட்ட சிறு வேளாண்மை யாளர்கள் நிலமற்றோர் கொடுகடன் திட்டம் ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியத்தினால் நிதியிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன அவற்றுள் சில வாகும். சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் III இன் கொடுகடன்

திட்டத்தின்கீழ்ப் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனமாக 1990 பெப்புருவரியில் குருநாகல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி தெரிவு செய்யப்பட்டது. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டத்திற்குள் அனுமதிபெறும் முதலாவது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி இதுவாகும். இந்தக் கொடுகடன் திட்டத்தின்கீழ் 1990 ஆம் ஆண்டில் வேளாண்மைக் கைத்தொழில், விலங்கு வளர்ப்பு,வியாபாரம் ஆகிய துறைகளுக்கு ரூ. 42 இலட்சம் கொண்ட 67 கடன்கள் குருநாகல் பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய புதிய வங்கித்தொழில் முறைகளான குழுக்கடன் வழங்கல் திட்டம், பராய மடையாதோர்—பாடசாலைப் பிள்ளைகள் வைப்புத் திட்டம், அபிவிருத்தி வைப் புத் திட்டம் மற்றும் 'மக்கள் சந்திப்பு' கோட்பாடு என்பன கிராமிய மக்களிடையே தொடர்ந்தும் பிரசித்தி பெற்றிருந்தமையை 1990 ஆம் ஆண்டில் இவ்வங்கிகளின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புப் பிரதி பலிக்கின்றது.

ஆய்விற்குரிய காலத்தில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தங்கள் கடன் தொழிற்பாடுகளின் மூலமாகக் கிட்டத்தட்ட 43,000 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக்கூடியதாய் இருந்ததுடன் பிரதேச கிராமிய அபிவிரு த்தி வங்கிகள் செயற்படத் தொடங்கிய காலம் தொட்டு 1990 இன் இறுதிவரை யிலும் தோற்றுவிக்கப்பட்ட புதிய தொழில்களின் கூட்டு மொத்தம் 425,000 ஆக விளங்கி கிராமியத்துறையில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதில் பிர தேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் பங்களிப்பை சிறப்பாகக் காட்டுகின்றது.

கிராமிய வங்கித்தொழிலை மேம்படுத்தும் குறிக்கோளினை நோக்கிப் பிர தேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளைச் செயற்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் 1990 ஆம் ஆண்டில் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டன. அவ்வப்பொழுது இவ்வங்கிகளுக்கு மதியுரை கூறுதல், பணிப்புரை விடுத்தல் என்பனவற்றிற்குப் புறம்பாக மத்திய வங்கியின் வங்கித்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலர்கள் அனேசமாக எல்லாப் பிரதேச கிராமிய அபிவிரு த்தி வங்கிகளுக்கும் நேரில் சென்று வேலைத் திட்டங்களை மீளாய்வு செய்தல் இவ்வங்கிகளின் பெரும் எண்ணிக்கையிலான பயன்பெறுநர்கள் மற்றும் ஊழியர் களை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கையில் ஈடுபட்டனர். இச்செயற்றிட்டக் காலத்திலும் களத்திற்குச் செல்லும்போதும் மத்திய வங்கியின் அதிகாரிகள் சில பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட கடன் பெறுநர் களுக்கான பயிற்சித் திட்டங்கள், கொடுகடன் சந்திப்புக்கள், மக்கள் சந்திப்புக்கள் (சனகமுவ) ஆகியவற்றிற்குச் சமூகமளித்தார்கள். இந்தச் சந்திப்புக்கள் வங்கிப் பணிகளைக் குறிப்பாக உற்பத்தி நடவடிக்கைகளுக்கான கொடுகடனைப் பெறு வதில் கிராமிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கலந்தாலோசிப்பதற் கான ஒரு பயனுள்ள மன்றமாக அமைந்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுகடன் சந்திப்புக்கள், மக்கள் சந்திப்புக்கள் ஆகியவற்றினால் தொடக்கி வைக்கப்பட்ட செயல்முறையின் பின் தொடர் நடவடிக்கையின்போது கிராமியத், துறைக்குக் கடன் வழங்குவதில் காணப்படும் பெரும்பாலான தடைகளை அகற்றுவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1990 இல் அதன் பயிற்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் விரிவாக்கியது. இவ்வாண்டில் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1,608 ஆட்களுக்கு 51 பயிற்சி நெறிகளை நடத்தியதுடன் இது 1989 இல் 853 ஆட்களுக்கு நடத்தப்பட்ட 39 பயிற்சி நெறிகளைவிடக் குறிப்பிடத்தக்களவில் அதிகமானதாகவும் இருந்தது. 1990 இல் நடத்தப்பட்ட 51 பயிற்சி நெறிகளில் 30 பயிற்சிநெறிகள், 902 சிறு அளவு தொழில் முயற்சியாளர்களும், சுயவேலைகளில் ஈடுபட்டுள்ளோரும் அவர்களது தொழில் முயற்சியினையும் முகாமைத் திறனையும் அபிவிருத்தி செய்வதற்கு உதவும்பொருட்டு வெளியிடங்களில் நடத்தப்பட்டன. இவர்களில் 810 பேர் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்து நன்மையடைந்தோராக விளங்கினர். மிகுதி 21 பயிற்சி நெறிகளும் வங்கித்தொழில், மற்றும் அதனோடிணைந்த துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இப் பயிற்சி நெறிகள் 96 மத்திய வங்கி அலுவலர்கள், 428 வர்த்தக வங்கியாளர்கள், 43 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியாளர்கள் மற்றும் நிதிக் கூட்டு நிலையங்கள், தேசிய சேமிப்பு வங்கி, சிறு வேளாண்மையாளர் மற்றும் காணியற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் போன்ற நிதி நிறுவனங்கள், மற்றும் முகவர் நிலையங்களிலிருந்தான 139 அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிமொத்தமாக 706 பேருக்கு இலக்கிடப்பட்டிருந்தன.

1990 இல் வழங்கப்பட்ட பயிற்சிகள் முக்கியமாக கிராமிய வங்கித்தொழில், செயற்றிட்டம் சார்ந்த அபிவிருத்திகள், வர்த்தக வங்கித்தொழில், பன்னாட்டு வர்த்தகம், செலாவணித் தொழிற்பாடுகள் தவணைக் கொள்வனவு மற்றும் குத்தகை நிதியிடல், முகாமைத்துவம், பயிற்றுநர்களுக்கான பயிற்சி, செயற்றிட்டங்களைக் கண்காணித்தலும் மதிப்பிடலும் தொடர்பூட்டல்,சிறிய அளவு தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்தி ஆகிய துறைகளில் காணப்பட்டன. இறுதியில் குறிப்பிடப்பட்ட 4 பயிற்சிநெறிகளும் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முற்றிலும் புதியனவாகும். 1990 ஆம் ஆண்டிற்கு அட்டவணையிடப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு மேலதிகமாக,வேண்டுகோலின் பேரிலான பல சிறப்புப் பயிற்சி நெறிகளையும் கல்லூரி நடத்தியது. இவை மாத்தறை மாவட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியில் கிராமிய கொடுகடன் முன்னோடிச் செயற்றிட்டத்தின் நன்மை பெறுநர்களுக்கான பயிற்சி நெறிகள், சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினைச் சேர்ந்த அலுவலர்களுக்கான பயிற்சி நெறிகள், இலங்கை தன்னியக்க தீர்வகம் மீதான பயிற்சி நெறிகள், வெளிநாட்டுச் செலாவணி பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை மரபுவழியும் கருவிகளும் என்பன மீதான பயிற்சி நெறிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. பின்னையது இலங்கை தொழில்சார் வங்கியாளர் அமைப்பு மற்றும் இலங்கை பொறக்ஸ் களரி என்பனவற்றை ஒழுங்குபடுத்தும் ஆயத்தின் வேண்டுகோளின்மீது நடத்தப்பட்டது.

பயிற்சி நெறிகளின் உறுதியான குறிக்கோள்களையும் அவற்றினது உள்ளடக்கத்தையும் விரிவாக விளக்கிய பயிற்சிநெறி நேர அட்டவணையையும் கல்லூரியினால் நடத்தப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பயிற்சி நெறிகள் மீதான பல பயிற்சி அறிக்கைகளையும் வெளியிட்டதன்மூலம் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி இவ்வாண்டில் பயிற்சி பெறுவதற்கான அதிகரித்த கேள்வியை ஈடுசெய்தது. இவ்வறிக்கைகள் குறிப்பாக மாவட்ட மற்றும் கிராமிய மட்டங்களில் உள்ள ஏனைய முகவர் நிலையங்களின் பயிற்றுநர்களுக்கு இதே வகையான பயிற்சிநெறிகளை நடாத்துவதற்கு அவசியமான வழிகாட்டலை வழங்குகின்றன. கல்லூரி அதன் 9ஆவது ஆண்டு நிறைவினையொட்டி ''மக்களின் தேவையை ஈடுசெய்வதற்கான வங்கித்தொழில் கொள்கையை'' மீளமைத்தல் என்பதன் மீதான விரிவுரையொன்றை 1990 ஒகத்து 30 ஆம் நாளன்று நடத்தியது. இவ்வுரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணாதிலகா அவர்களினால் நிகழ்த்தப்பட்டது.

## ஊழியர் சேமநிதியம்

ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உதவுதொகைகள் தண்டப்பணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல் நிதியத்தின் நிதியங்களின் முதலீடுகளிலிருந்தான வருவாய்களைப் பெற்றுக்கொள்ளல், பதிவு செய்யப்பட்ட தொழில் தருநர்கள் நிதியத்தின் தனிப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோருக்கான பொருத்தமான பதிவேடுகளைப் பேணல், உறுப்பினர்களின் மீளளிப்பு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றிற்கான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தின் இந்த நடவடிக்கைகள் ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நிருவாகத்தினையும் வலுப்படுத்தலையும் மேற்கொள்ளும் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவின் நெருங்கிய கூட்டுறவுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

### உதவு தொகைகள்

1989 இன் ரூபா 30,217 இலட்சத்திற்கெதிராக 1990 இல் நிதியத்தினால் பெறப்பட்ட உதவுதொகைகள் ரூபா 39,095 இலட்சமாக விளங்கின. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகை அளவினைவிட ரூபா 8,878 இலட்சம் அல்லது 29.4 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது.

### உறுப்பினர்களின் நிலுவைகள்

ஆய்விற்குரிய ஆண்டுக்கான வட்டி ஒதுக்கப்பட முன்னர் 1990 திசெம்பர் 31 இல் உறுப்பினர்களின் நிலுவைகள் ரூபா 362,977 இலட்சமாக விளங்கியதுடன் இது 1989 இனைவிட ரூபா 59,401 இலட்சம் அல்லது 19.6 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது.

**முதலீடுகள்**

1989 இன் ரூபா 88,972 இலட்சத்திற்கெதிராக ஆய்விற்குரிய ஆண்டில் அரச பிணைகள், தேசிய பாதுகாப்பு முறிகள், திறைசேரி உண்டியல்கள் அரசஈட்டு முதலீட்டு வங்கித் தொகுதி முறிகள் என்பனவற்றில் ரூபா 110,447 இலட்சங் கொண்ட தொகையொன்றினை நிதியம் முதலீடு செய்தது. இது 1989 இன் முதலீட்டு மட்டத்தினைவிட ரூபா 21,475 இலட்சங் கொண்ட அதிகரிப் பொன்றாகும். 1990 திசெம்பர் 31 ஆம் நாளன்று நிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூபா 384,667 இலட்சமாக விளங்கியதுடன் இது 1989 இன் மட்டத்தினை விட ரூபா 61,927 இலட்சங் கொண்டதொரு அதிகரிப்புமாகும். இவ்வதிகரிப்பு அரசஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிமுறிகளில் செய்யப்பட்ட ரூபா 1,000 இலட்சம் கொண்ட தொகையையும் உள்ளடக்குகிறது.

**முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்**

1989 இன் ரூ. 34,260 இலட்சத்திற்கெதிராக 1990 இல் முதலீடுகளி லிருந்து பெறப்பட்ட வருவாய் ரூபா 41,877 இலட்சமாக விளங்கி ரூபா 7,619 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1990 ஆம் ஆண்டிற்காக முதலீட்டு வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட மொத்தப் பிடித்துவைத்தல் வரி ரூபா 4,180 இலட்சமாக விளங்கியது.

**மீளளிப்புக்கள்**

1989 இன் ரூபா 6,330 இலட்சத்திற்கெதிராக 1990 இல் ஊழியர் சேம நிதிய நன்மைகளின் மீளளிப்பு மூலம் உறுப்பினர்களுக்குக் கொடுப்பனவு செய்யப் பட்ட மொத்தத் தொகை ரூபா 120,,94 இலட்சமாக விளங்கியது. இது ரூபா 5,767 இலட்சம் அல்லது 91.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1989 இல் செலுத்தப்பட்ட 26,287 கோரல்களுக்கெதிராக மீளாய்விற்குரிய ஆண்டில் நன்மை மீளளிப்புக்காக 44,813 கோரல்களுக்குக் கொடுப்பனவு செய் யப்பட்டது.

**உறுப்பினர்களின் நிலுவைகளின் மீதான வட்டி**

நிதியத்தின் முதலீட்டுப் பணத்திலிருந்து பெறப்படும் வருவாயிலிருந்து ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் உறுப்பினர்களின் நிலுவைகளின்மீது வட்டி வழங்கும்படி ஊழியர் சேம நிதியம் கேட்கப்பட்டுள்ளது. 1990 இறுதியில் உறுப்பினர்களின் நிலுவைகள் மீது கொடுபடவேண்டிய வட்டி ஆண்டிற்கு 11.5 சதவீதமாக இருந்தது.

**ஊழியர் சேமநிதிய கணக்குப் புத்தகங்களில் நிலுவைகளைப் பதிவு செய்தல்**

தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊழியர் சேமநிதியக் கணக்குப் புத்தகங்களில் நிலுவைகளைப் பதிவு செய்தல் 1990 ஒத்தோபரில் தொழில் ஆணையாளரினால் இந்நடைமுறை இடைநிறுத்தப்படும்வரை மீளாய்விற்குரிய ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது. கணக்குப் புத்தகங்களில் நிலுவைகளைப் பதிவதற்குப் பதிலாக, 1989 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர்களின் பெயர் குறிப் பிடப்பட்ட கணக்குக் கூற்றுக்கள் 1990 இல் வழங்கப்பட்டன.

## ஊழியர் சேமநிதிய வீடமைப்புக்கடன் திட்டம்

*1988* இல் ஊழியர் சேமநிதியச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் விளைவாக ஊழியர்களின் வரவில் நிற்கும் நிலுவையில் 75 சதவீதம் வரையிலான தொகை கடன் வழங்கல் நிறுவனங்களினால் வீடமைப்புக் கடன்களாக வழங்கப்படுகின்றன. இந்நோக்கித்திற்காக *1989* இல் வழங்கப்பட்ட *29,156*இற்குஎதிராக மீளாய்விற்குரிய ஆண்டில் உறுப்பினர்களின் வரவில் நிற்கும் நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற *35798* சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தற்பொழுது கிடைக்கும் [redacted]ின் அடிப்படையில் [redacted]களின் ஒப்பீட்டுக் கூற்றொன்று அட்டவணை 2.9 இல் தரப்பட்ள்ளது.

### அட்டவணை 2.9

### ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1989–1990

(ரூ. பத்து இலட்சங்களில்)

| | | 1989 | 1990 |
|---|---|---|---|
| 1. | பெறப்பட்ட உதவு தொகைகள் .. | 3,021.7 | 3,909.5(அ) |
| 2. | முதலீடுகள் .. | 8,897 .2 | 11,044.7(ஆ) |
| 3. | முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் .. | 3.425.8 | 4,187.7 |
| 4· | மீளளிப்புக் கொடுப்பனவுகள் .. | 632.7 | 1,209.4 |
| 5. | மீளளிப்புக்களின் எண்ணிக்கை .. | 26,287 | 44,813 |
| 6. | வட்டி வீதம் (%) .. | 11% | 11.5% |
| 7. | உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கல் .. | 3,339.3 | 4,174.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.
(ஆ) அரச பிணைகளில் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சி தொகைகளையும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## செலாவணிக் கட்டுப்பாடு

*1990* இல் மத்திய வங்கியினால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் செயல் முறையில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன:—

### 1. இறக்குமதிகள்

(அ) பிணையத்தில் தயாரிப்புத் திட்டத்தின் கீழான மூலப்பொருட்களின் இறக்குமதி

ஏற்றுமதிசார் ஆடைத் தயாரிப்பாளர்கள் கொடுகடன்கள் பத்திரங்களை நிறுவாமல் 120 நாட்கள் பிற்போடப்பட்ட கொடுப்பனவு

நியதிகள் கொடுப்பனவின் மீதான ஆவணங்கள் நியதிகள் என்பவற்றின் அடிப்படையில் தமக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய இயலச் செய்யும் வகையில் பரீட்சார்த்த அடிப்படையில் ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (23.01.1990 இன் எண் ஈசி/4/1990 (பீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்) ஏற்றுமதி சார்ந்த பெறுமதியூட்டப்பட்ட இரத்தினக்கற் கைத்தொழிலின் வைரக்கல் நீங்கலான செப்பமற்ற இரத்தினக் கற்களின் இறக்குமதிக்கும் 90 நாட்களுக்குக் குறைக்கப்பட்டு இவ்வசதி விரிவாக்கப்பட்டது. (26.01.1990 இன் எண் ஈசி/5/90 (பீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

(ஆ) பாவிக்கப்பட்ட உந்து ஈருருளிகள்:—முதற் பதிவுத் திகதியிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த உந்து ஈருருளிகளின் இறக்குமதியினைத் தடைசெய்யும் வகையில் பயன்படுத்தப்பட்ட உந்து ஈருருளிகளின் இறக்குமதி மீது நிபந்தனையொன்று விதிக்கப்பட்டது. (07.03.1990 இன் எண் ஈசி/17/90 (பீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்) உந்து ஈருருளிகளின் இறக்குமதி 11.07.1990 இல் முற்றாகத் தடைசெய்யப்பட்டது. ஆனால் இறக்குமதியாளர்கள் ஆகக் குறைந்த 3 ஆண்டுக் காலம் பயன்படுத்தக்கூடியது என்ற உத்தரவாதத்துடன், வீதிகளில் செலுத்துவதற்கான தகைமையினையும் உள்ளடக்கி ஏற்றும் துறைமுகத்தின் மதிப்பீட்டு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற புதிய நிபந்தனையுடன் 19.07.90 இல் மீண்டும் அனுமதியளிக்கப்பட்டது. (எண் ஈசி/42/90 (பீ) வின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்) எனினும் ஏற்றும் துறைமுகத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் இந்தத் தேவையும் 1990 நவெம்பரில் நீக்கப்பட்டது. (14.11.90 இன் எண் ஈசி/69/90 (பீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

(இ) பேருந்துகள்

பேருந்துகள் 30—40 பயணிகள் கொள்ளளவுடையதும், கிட்டத்தட்ட ரூ. 250,000 விலையுடையதும், முதலாவது பதிவுத் திகதியிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பழமையற்றதும் என்ற நிபந்தனைகளைக் கொண்ட கொடுகடன் பத்திரங்களில் உள்ளடக்கப்படுமிடத்து ஏற்றுமதிகள் இறக்குமதிகள் கட்டுப்பாட்டாளரின் தகுதிச் சான்றிதழ் இன்றி மறு சீரமைக்கப்பட்ட பேருந்துகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. (10.07.1990 இன் எண் ஈசி/37/90 (பீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்) இந்த ரூ. 250,000 உச்சவரம்பு 31.08.1990 இல் நீக்கப்பட்டது.

(ஈ) உணவுப் பொருட்கள்

கப்பலேற்றப்பட்ட பொருட்கள் நேரடி மனித நுகர்வுக்குத் தகுதியானவை என்பதனை உறுதிப்படுத்தும் ஏற்றும் துறைமுக அளவீட்டு அறிக்கையை வேண்டிநிற்கும் கூற்றினை எல்லா வகையான உணவு விடயங்களினதும் இறக்குமதிக்கான கொடுகடன் பத்திரத்தில் உள்ளடக்குமாறு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகர்கள் அறிவிக்கப்பட்டனர். (08.01.90இன் எண் ஈசி/01/90(பீ)தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

(உ) உழவுப்பொறிகள்

இறக்குமதி செய்யப்படும் உழவுப்பொறிகள் 5 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்ததாக இருக்கக்கூடாது என வேண்டப்படும் நிபந்தனை ஓராண்டுக் காலப்பகுதிக்கு நீக்கப்பட்டது (30.11.1990 இன் எண் ஈசி/73/90 (பீ) இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

**2. ஏற்றுமதிகள்**

(அ) கொடுப்பனவு நியதிகள்

ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 360 நாட்கள் வரையிலான பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளில் அமைந்த சோவியத் ஒன்றியத்திற்கான தேயிலை, இறப்பர்,தும்பு உற்பத்திகள் என்பவற்றின் கொள்வனவு விற்பனைகள் முறையே 06.07.1990, இலும் 12.07.1990 இலும் அனுமதியளிக்கப்பட்டன.

(ஆ) ஏற்றுமதி வருவாய்கள் மீதான தரகுக் கொடுப்பனவு

பொருட்களை வாங்குபவரே முகவராக அமைகையில் க.ஏ.பெ. பெறுமானத்தில் முகவருக்குச் செலுத்தவேண்டிய 5 சதவீதம் வரையிலான தரகுப் பணத்தினை அத்தகைய ஏற்றுமதிகளின் வருவாயினைப் பெறுவதற்கு முன்னே கழித்துக் கொள்வதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. (23.04.1990 இன் எண் ஈசி/28/90 (எச்.பி.சி.) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

**3. பயணம்**

இலங்கையில் வதிபவர்களால் செய்யப்படும் ரூபாக் கொடுப்பனவுகளுக்கெதிராக வியாபார வகுப்பு விமானச் சீட்டுக்களை வழங்குவதற்கு அனைத்து வான்வழி முகவர்களும் அனுமதிக்கப்பட்டனர். (16.10.90 இன் எண் ஈசி/62/90 (கே) இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்) அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்களும் அத்தகைய 'பி' படிவங்களை உறுதிப்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டது (16.10.90 இன் எண் ஈசி/63/90 (கே) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்) அத்துடன் அவர்கள் வதியாதோர் வெளிநாட்டு நாணய நிதியத்திற்கு எதிராகப் பயணக் கட்டணங்களை அங்கீகரிக்கவும் அனுமதியளிக்கப்பட்டனர்.

வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் ஆட்களால் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யக்கூடிய இலங்கை ரூபாய்களின் தொகை ரூ. 250 இலிருந்து ரூ. 1,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. (17.12.90 இன் எண் ஈசி/77/90 (கே) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்) வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கூறின் பயண நோக்கத்திற்கான எடுப்பனவுகள் தொடர்பில் வழங்கக்கூடிய வெளிநாட்டு நாணயத் தாள்களின் சதவீதம் 20 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. (07.12.1990 இன் எண் ஈசி/78/90 (டி) இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

ஐக்கிய அமெரிக்க டொலர் 5,000 இற்குக் குறைவான வெளிநாட்டு நாணயங்களை எடுத்துச் செல்லும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டை வைத் திருப்பவர்கள் அவற்றைச் சுங்கத்திற்கு வெளிப்படுத்தத் தேவையில்லை எனச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அறிவிக்கப்பட்டுள்ளார்.

**4. கல்வி**

ஐக்கிய இராச்சியத்திற்குப் பயணமாகும் மாணவர்களுக்கான வாழ்க்கைப் படிகள் 21.08.1990 இலிருந்து பட்டதாரி மாணவர், தொழிற்துறையினர், தொழிநுட்பக் கல்வி என்பவை தொடர்பில் ஆண்டுக்கு ஸ்டேர்லிங் பவுண் 3,120 இலிருந்து ஸ்டேர்லிங் பவுண் 4,500 இற்கும், பட்டப்பின்படிப்புத் தொடர்பில் ஆண்டுக்கு ஸ்டேர்லிங் பவுண் 3,840 இலிருந்து ஸ்டேர்லிங் பவுண் 4,800 இற்கும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (13.09.1990 இன் எண் ஈசி/54/90 (ஈ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

**5. ஈராக்கிய மற்றும் குவைத்திய வங்கிக்கணக்குகளை முடக்குதல்**

ஈராக்கிய அரசு, அதன் முகவர்கள் மற்றும் அனைத்து குவைத்திய அரச முகவர்கள் என்பனவற்றின் உள்நாட்டு மற்றும் இலங்கையரல்லாத வதி வாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஆகியயிரண்டையும் உள் ளடக்கிய அனைத்து வங்கிக் கணக்குகளையும் முடக்கி வைக்குமாறு அதிகார மளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அறிவுறுத்தப்பட்டனர். (31.08.90 இன் எண் ஈசி/50/90 (டீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்). அது தனியார் தொழில் முயற்சிகளுக்கும் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச் சினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பொது ஒப்புதல் பெற்ற வெளிநாட்டுத் தூதரக ஆளணியினர் தவிர்ந்த ஏனைய தனிப்பட்டவர்களின் கணக்குகளுக் கும் விரிவாக்கப்பட்டது. (05.09.90 இன் எண் ஈசி/51/90 (டீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

**6. வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

இந்த வசதி வெளிநாட்டுத் தொழிலுக்காக ஆளணிகளைத் திரட்டுவதில் ஈடுபட்டுள்ள உள்ளூர்த் தொழில் முகவர்களும் தமது பணிகளில் உழைத்த தமது கட்டணங்களையும் தரகுகளையும் அவர்களது கணக்கில் வரவிட இயலச் செய்யும் வகையில் விரிவாக்கப்பட்டது (30.03.1990 இன் எண் ஈசி/22/90 (டீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

**7. முதலீடுகள்**

பட்டியலிடப்பட்ட கூட்டுநிலையங்களின் வழங்கப்பட்ட மூலதனத்தில் 40 சதவீதம் வரையிலான பங்குகளில் ஒப்புதலளிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், பிரதேச ரீதியிலான நிதியங்கள், வதிவற்ற தனியாட்கள் (வெளிநாட்டில் வதியும் இலங்கையர் உட்பட) ஆகியோர் முதலிடுவதற்குச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 10, 11, 15 ஆம் பிரிவுகளின் கீழ் பொதுவான அனுமதி வழங்கப்பட்டது.

இப்பொதுவான அனுமதியுடன் இத்தகைய முதலீடுகளுக்கு வசதியளித்து அவற்றைக் கண்காணிப்பதற்காகப் பங்கு முதலீடு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள் திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகர்களூடாக அறிமுகம் செய்யப்பட்டது. இம்முதலீடுகள் தொடர்பான விற்பனவுப் பெறுகைகளில் வரி நீங்கலான தொகை முழுவதனையும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதல் இன்றித் தாய்நாட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின்படி அரசின் சார்பாக மத்திய வங்கி பொதுப்படுகடனை முகாமைப்படுத்துவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளாக அரச பிணைகள்/கடன்களைப் பிரேரித்தல், திறைசேரி உண்டியல்கள், தொகுதிக் கடன்கள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்களை வழங்குதல், அரசின் வெளிநாட்டுப் படுகடனை முகாமைப்படுத்தலும் பேணுதலும் என்பன விளங்கின. மேலும் பொதுப்படுகடன் மீதான தரவு மூலத்தினைப் பேணுதல், பொதுப்படுகடன் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

1990 இறுதியில் வெளிநின்ற அரசின் மொத்தப் படுகடன் ரூ. 3,155,330 இலட்சமாக விளங்கி ரூ. 401,100 இலட்சங் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இவ்வதிகரிப்பில் ரூ. 85,080 இலட்சம் அல்லது 21 சதவீதம் செலாவணித் தேய்வு காரணமாக ஏற்பட்டதாகும். வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் மொத்தத்தில் 56 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் உள்நாட்டுப் படுகடனின் பங்கு 44 சதவீதமாக விளங்கியது.

வரவு செலவுத்திட்டத் தேவைகளை ஈடுசெய்வதற்காக இவ்வாண்டில், ரூ. 128,470 இலட்சம் பெறுமதி கொண்ட அரச ரூபாப் பிணைகள் பிரேரிக்கப்பட்டன. ரூபாக் கடன்களின் மொத்த மீளக் கொடுப்பனவும் 1990 இல் செலுத்தப்பட்ட வட்டியும் முறையே ரூ. 78,540 இலட்சமாகவும், ரூ. 68,570 இலட்சமாகவும் விளங்கின. ஆண்டின் இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 592,090 இலட்சமாக விளங்கியது. இதில் ரூ. 45,320 இலட்சம் பாதுகாப்பு முறிகளை உள்ளடக்கியிருந்தது. கடந்த காலத்தைப் போன்று 1990 இன் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநராக ஊழியர் சேமநிதியம் தொடர்ந்தும் விளங்கி மொத்தத்தில் 64 சதவீதத்திற்கு வகை கூறியது. தேசிய சேமிப்பு வங்கி 1989 இல் எவ்வித தொகையையும் உதவாதிருந்தமையுடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 33,920 இலட்சங் கொண்ட பெருமளவு தொகையினை அல்லது மொத்தத்தில் 26 சதவீதத்தினை உதவியது.

திறைசேரி உண்டியல்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூ. 650,000 இலட்சத்திலிருந்து 1990 ஒத்தோபர் 29 இல் ரூ. 900,000 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டு ஆண்டின் மீதிக் காலப்பகுதியில் மாற்றமின்றித் தொடர்ந்திருந் தது. வங்கி பொதுமக்களுக்கு 3, 6, 12 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களைத் தொடர்ந்தும் வழங்கியது. 1990 ஏப்பிறல், செத் தெம்பர், திசெம்பர் மாதங்களில் 3, 6, 12 மாதத் திறைசேரி உண்டியல்களுடன் 3 மாதங்களுக்குக் குறைவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களும் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டன. கொழும்பில் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலைகளில் திறைசேரி உண்டியல்களை வழங்கும் முறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள்,பணத் தரகர்கள் என்பவற்றினூடாகவும் பிரதேச அலுவலகங்களுடன் மத்திய வங்கியும் திறைசேரி உண்டியல்களை விற் பனவு செய்தது. பொதுமக்களிடையே திறைசேரி உண்டியல்களைப் பிரபல்யப் படுத்துதல் ஆய்விற்குரிய ஆண்டில் தொடர்ந்தும் இடம்பெற்றதுடன் முதலாந் தரச் சந்தையில் மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் பங்கு 1989 இறுதியில் 60 சதவீதத்திலிருந்து 1990 இறுதியில் 45 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. ஆண்டின் இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் ரூ. 679,680 இலட்சமாக விளங்கின. இவ்வாண்டில் செலுத்தப்பட்ட மொத்த வட்டி ரூ. 95,630 இலட்சமாக விளங்கியது. 1990 இல் மத்திய வங்கியினாலும், பொதுமக்களாலும் கொள்வனவு செய்யப்பட்ட புதிய வழங்கல்கள் ரூ. 110,000 இலட்சமாக விளங்கின.

1990 மே 23 இலிருந்து மத்திய வங்கி 6, 12, 24 மாத முதிர்ச்சிக் காலத் தைக் கொண்ட அரச திறைசேரி வைப்புச் சான்றிதழ்களை வழங்கத் தொடங் கியது. 1990 இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 1,090 இலட்சமாக விளங் கியது.

1990 இல் நடுத்தர, நீண்டகால வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்தப் பெறுகை ரூ. 169,450 இலட்சமாகவும், மீளக் கொடுப்பனவுகள் ரூ. 48,620 இலட்சமாகவும் விளங்கின. வெளிநாட்டுப் படுகடனில் செயற்றிட்டக் கடன்களின் பங்கு 74.8 சதவீதமாக விளங்கியவேளையில் மீதித் தொகை செயற்றிட்ட மல்லாக் கடன்களைப் பிரதிபலித்தது. 1990 இல் வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளும் ஏனைய கட்டணங்களும் ரூ. 36,780 இலட்சமாக விளங்கின.

## பிரதேச அலுவலகங்கள் – மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை

கிராமிய அபிவிருத்தியில் மத்திய வங்கியின் பங்கினைத் தொடரும் விதத்தில் 1989 உடன் ஒப்பிடுகையில் நாட்டில் நிலவிய சார்புரீதியில் பொருத்தமான உள்நாட்டு நிலைமைகளின் வசதி காரணமாக மாத்தறை, அநுராதபுரம், மாத் தளைப் பிரதேச அலுவலகங்கள் 1990 இல் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவான வேகத்தில் தொடர்ந்தும் மேற்கொண்டன.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் பிரதேச அலுவலகங்களின் முக்கிய கவனம் செயற்றிட்டத்தினை அடையாளம் காணல், பல்வேறு மீள்நிதியிடல் திட்டங்களின்கீழ் வங்கி நிதியிடலுக்காக ஆற்றல் மிக்க செயற்றிட்டங்களை மதிப்பிடுதலும் விதந்துரைத்தலும், அத்தகைய செயற்றிட்டங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்தமை மற்றும் அட்டவணைப்படிக் கடன்கள் மீளச் செலுத்தப்பட்டமை என்பனவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டுச் செயற்றிட்டங்களைப் பின்னர் மேற்பார்வை செய்தல், தொழில் முயற்சியாளர் அபிவிருத்திக்கான பயிற்சித் திட்டங்களை நடத்துதல், கொடுகடனின் உச்சப் பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டுப் பல்வேறு கிராமியக் கொடுகடன் திட்டங்கள் பற்றிப் பொதுமக்களுக்குக் கல்வி புகட்டல் என்பனவற்றை நோக்கி முக்கியமாகத் திருப்பப்பட்டது. மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு மீள்நிதியிடல் திட்டங்களில் பிரதேச அலுவலகங்கள் சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்புத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் மீதே முக்கிய கவனத்தைச் செலுத்தின. இத்திட்டம் 1990 ஓகத்தில் தீவு முழுவதற்குமான சுயதொழில் வாய்ப்பு கடன் திட்டத்தினால் பதிலிடப்பட்டது. தொடர்பான பிரதேசங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் முடிவடைந்தமையின் மூலம் களங்களுக்குச் செல்லுதலை மீண்டும் தொடங்குவது சாத்தியமாக இருந்தமையின் பெருமளவு காரணமாக 1990 பகுதியில் இத்திட்டத்தின் கீழான கொடுகடன் வழங்கல் கணிசமானளவில் விரிவடைந்தது.

இத்திட்டத்தின்கீழ், மாத்தறைப் பிரதேச அலுவலகம் 1990 இல் வங்கி நிதியிடலுக்காக ரூ. 84 இலட்சம் பெறுமதி கொண்ட 1,179 செயற்றிட்டங்களை விதந்துரைத்தது. முன்னைய ஆண்டின் ரூ. 22 இலட்சத்தினை மட்டும் கொண்ட 179 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இது வரவேற்கத்தக்க முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தது. தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம், மத்திய நில நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் உள்நாட்டு உண்டியல் திட்டம் போன்ற ஏனைய மீள்நிதியிடல் திட்டங்களுடன் மாத்தறைப் பிரதேச அலுவலகம் வருங்காலத்தில் இப்புதிய திட்டங்களைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியாளர்கள், அரசு மற்றும் அதனுடன் தொடர்பான முகவர்களின் அறிவாற்றலை அதிகரிக்கும் பொருட்டுப் பல ஆய்வரங்குகளையும் தொழிற்கூடங்களையும் நடத்தியது.

அநுராதபுரப் பிரதேச அலுவலகம் 1989 இல் விதந்துரைக்கப்பட்ட ரூ. 43 இலட்சம் தொகை கொண்ட 297 கடன்களுக்கெதிராக 1990 இல் சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்பு கொடுகடன் திட்டத்தின்கீழ் ரூ. 136 இலட்சம் பெறுமதி கொண்ட 756 சிறு அளவு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு விதந்துரைத்தது. இம் மொத்த எண்ணிக்கையில் 612 செயற்றிட்டங்கள் அல்லது 80 சதவீதம் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளுடனும் 84 செயற்றிட்டங்கள் அல்லது 11 சதவீதமானவை விலங்கு வளர்ப்புடனும் தொடர்பானவையாகக் காணப்பட்டன. அநுராதபுர பிரதேச அலுவலகமும் 1990 சிறுபோகத்தில் பரிசோதனை அடிப்படையில் பெரிய வெங்காயத்தின் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காகச் சிறப்புச் செயற்றிட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது.

1990 இல் மாத்தளை பிரதேச அலுவலகம் முன்னைய ஆண்டின் ரூ. 29 இலட்சம் கொண்ட 259 கடன்களுக்கெதிராக ரூ. 85 இலட்சம் பெறுமதி கொண்ட 542 சுயதொழில்வாய்ப்புக் கடன்களுக்கு நிதி வழங்க வங்கிகளுக்கு ஆதரவளித்தது. இது விதந்துரைக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் 109 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். கண்டி, மாத்தளை மாவட்டங்களிலுள்ள மூன்று கிராமங்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக மாத்தளைப் பிரதேச அலுவலகம் சிறப்பு விலங்குவளர்ப்புச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டது. 1989 இல் விதந்துரைக்கப்பட்ட ரூ. 8 இலட்சம் பெறுமதி கொண்ட 61 செயற்றிட்டங்களுக்கெதிராக 1990 இல் மாத்தளை பிரதேச அலுவலகம் ரூ.20 இலட்சம் பெறுமதி கொண்ட 143 விலங்குவளர்ப்புச் செயற்றிட்டக் கடன்களை வங்கிகளுக்கு விதந்துரைத்தது. தீவு முழுவதற்குமான பண்ணைப் பொறித்தொகுதிக் கடன் திட்டத்தின்கீழ் பிரதேச அலுவலகம் ரூ. 11 இலட்சம் பெறுமதி கொண்ட 65 செயற்றிட்டங்களை வங்கிகளுக்கு விதந்துரைத்தது. இக்கடன்களில் பெரும்பகுதி சனசவிய நன்மை பெறுவோர் நீர் இறைக்கும் பம்புகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டதுடன் இது உற்பத்தியாக்க வேளாண்மை செயற்றிட்டங்களில் அவர்கள் ஈடுபடவும் உதவியது. மாத்தளைப் பிரதேச அலுவலகம் சிறுபோகத்தில் பெரிய வெங்காயத்தைப் பயிர் செய்வதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குவதிலும் இவ்வுற்பத்தியை நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதிலும் சிறப்பான கவனத்தைச் செலுத்தியது. இவ்வலுவலகம் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம் தொடர்பாக 68 களப் பரிசோதனைகளை மேற்கொண்டதுடன் நிதியிடலுக்காக வங்கிகளுக்கு 38 விண்ணப்பங்களையும் விதந்துரைத்தது.

கடந்த காலத்தினைப் போன்றே பிரதேச அலுவலகங்கள் வேளாண்மைக் கடன்களின் பகிர்ந்தளிப்புக்களுக்காகக் கொடுகடன் முகாம்களைத் தொடர்ந்தும் நடத்தின. 1990 காலப் பகுதியில் அநுராதபுர, மாத்தளைப் பிரதேச அலுவலகங்கள் தமது பிரதேசங்களில் முறையே அத்தகைய 2 முகாம்களையும், 10 முகாம்களையும் நடத்தின.

முன்னுரிமைத்துறைகளுக்குக் கொடுகடன் வசதிகளை விரிவுபடுத்துவதுடன் தொடர்பான நடவடிக்கைகளுடன் மூன்று பிரதேச அலுவலகங்களும், கிராமியப் பயிர்ச்செய்கையில் சமூகத்தின் அறிவையும் தொழில்நுட்பத் தேர்ச்சியையும், உயர்ந்த உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்கு வேளாண்மை நடைமுறைகளின் சிறந்த பயன்பாட்டினையும் தரமுயர்த்தும் நோக்குடன் வேளாண்மைத் திணைக்களத்தின் உதவியுடன் பயன்பெறும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள், தொழிற் கூடங்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடாத்தின.

ஆய்விற்குரிய ஆண்டில் அநுராதபுரப் பிரதேச அலுவலகத்தினால் 30 மக்கள் சந்திப்புக்களும், 24 வேளாண்மைப் பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்பட்டன. மாத்தளைப் பிரதேச அலுவலகம் நடத்திய 11 ஆய்வரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் 8 முக்கியமாக சனசக்தி நன்மை பெறுவோரின் நன்மைக்காக நடத்தப்பட்டன. மேலும் அடிமட்டத்தில் சுயதொழில் செயற்றிட்டத்திற்கான கொடுகடனின் சிறிதளவு எண்ணிக்கையுடன் தொடர்பான பிரச்சனைகளை அடையாளம் காணும்பொருட்டு அவர்களினால் 17 கிராம மட்டக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

1990 இல் அனைத்து மூன்று பிரதேச அலுவலகங்களும் தொடர்பான பிரதேசங்களில் குறிப்பிட்ட மத்திய வங்கி அலுவலர்கள் வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகள் என்போரின் பங்கேற்புடன் கொடுகடன் வழங்கல் பொறிமுறையில் உள்ள தடைகளை வெளிப்படுத்தும் விடயங்கள் தொடர்பான துறையில் கொடுகடன் கூட்டங்களை ஒழுங்குசெய்தன. இக்கூட்டங்களின் விளைவாக வர்த்தக வங்கிகளின் கூட்டுடன் கிராமப்புறங்களில் கொடுகடன் விரிவாக்கத்திற்குகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவது சாத்தியமாயிற்று. பிரதேச அலுவலகங்கள் அவை தொடர்பான பிரதேசங்களில் இவ்வாண்டு நடைபெற்ற பல நடமாடும் சனாதிபதி மற்றும் அமைச்சுப் பணிகளில் பங்கேற்றதுடன் வங்கியிலிருந்து தேவைப்பட்ட பல பணிகளையும் இவை வழங்கின.

சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் கட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் வங்கியின் கவனம் சனசக்தி நன்மை பெறுவோருக்கு சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதை நோக்கித் திரும்பியது. நன்மை பெறுவோருக்குக் கல்வியையும், தூண்டுதலையும் வழங்குவதற்காகவும் அவர்களினால் எதிர்நோக்கப்பட்ட கொடுகடனுடன் தொடர்பான பிரச்சனையை இனங்காண்பதற்காகவும் கிராம மட்டங்களில் கூட்டங்களை/தொழில் கூடங்களை அமைப்பதன்மூலம் இம்முயற்சிகளுக்கு உதவுவதற்கும் பிரதேச அலுவலர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். அநுராதபுரப் பிரதேச அலுவலகம் அத்தகைய 7 கூட்டங்களை நடத்தியவேளையில் மாத்தறை, மாத்தளைப் பிரதேச அலுவலகங்களும் சனசக்தி நன்மை பெறுவோருக்காகப் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அவற்றின் பிரதேசங்களில் நடத்தின. மேலும் அநுராதபுரம், மாத்தளைப் பிரதேச அலுவலகங்கள் சனசக்தி நன்மை பெறுவோருக்காக முறையே 97 செயற்றிட்டங்களையும், 371 செயற்றிட்டங்களையும் கடன் வழங்கும் வங்கிகளுக்கு விதந்துரைத்தன.

அநுராதபுர, மாத்தறைப் பிரதேச அலுவலகங்கள் அப்பிரதேச மக்களினதும் அப்பிரதேசங்களில் அமைந்துள்ள வர்த்தக வங்கிக் கிளைகளினதும் நாணயத் தேவையை வழங்கும் நோக்குடன் முறையே 1990 யூன் 1 ஆம் நாளும், யூலை 2 ஆம் நாளும் நாணயத் தொழிற்பாடுகளைத் தொடங்கின. சிறப்பாகப் புதிய நாணயத் தாள்களை வழங்குவதற்காக இவ்வலுவலகங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றல் பீடங்கள் வர்த்தக சமூகத்தினரிடையேயும் பொதுமக்களிடையேயும் பெரும் பிரபல்யம் பெற்று வருகின்றன. இது வளர்ந்துவரும் நாணயத் தேவைகளை மட்டுமன்றி மிகையான காசிற்குப் பாதுகாப்பான வைப்பு வசதிகளையும் வழங்குவதன் மூலமாக இப்பிரதேசத்திலுள்ள வங்கிகளுக்கும் மற்றைய கொடுகடன் நிறுவனங்களுக்கும் பயன்மிக்க பணிகளையும் வழங்குகிறது.

1990 இல் இப்பிரதேச அலுவலகங்கள் தொடர்ந்தும் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தன. 1990 இல் மாத்தறைப் பிரதேச அலுவலகம் ரூ. 1,270 இலட்சம் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. அநுராதபுர, மாத்தளைப் பிரதேச அலுவலகங்களினால் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் முறையே ரூ. 15,850 இலட்சமாகவும், ரூ. 17,230 இலட்சமாகவும் விளங்கி முன்னைய ஆண்டினைவிட முறையே 36 சதவீத, 44 சதவீத வீழ்ச்சிகளைப் பிரதிபலித்தன.

மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான பிரதேச காசோலைத் தீர்ப்பனவுகள் 1990 இல் விரிவடைந்தன. எல்லாமாக ரூ. 13,900 இலட்சம் பெறுமதியான 100,508 காசோலைகளை மாத்தறையிலுள்ள பிரதேசத் தீர்வகம் தீர்ப்பனவு செய்தவேளையில் அநுராதபுரத் தீர்வகம் ரூ. 11,920 இலட்சம் பெறுமதி கொண்ட 69,615 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது. மாத்தளைப் பிரதேச அலுவலகத்துடன் இணைந்துள்ள கண்டி, மாத்தளை தீர்வகங்கள் இரண்டும் 1990 இல் ரூ. 66,120 இலட்சம் பெறுமதி கொண்ட 312,247 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தன.

## தகவலும் வெளியீடுகளும்

மத்திய வங்கி அதன் பணிகளான தகவல்களைச் சேகரிப்பவர், களஞ்சியப்படுத்துபவர், பரப்புபவர் என்ற அதன் தொழிற்பாடுகளை இலங்கையின்சமூக பொருளாதார போக்குகள், அபிவிருத்தி உத்திகள், வங்கியின் உதவித் திட்டங்கள் என்பன தொடர்பான தரவுகளையும் தகவலையும் தொடர்ந்தும் வழங்கியதன் மூலம் மேற்கொண்டது. வங்கியினால் கிரமமாக வெளியிடப்பட்ட நூல்களும், பருவ வெளியீடுகளும் இவ் அறிவினை மிகப் பெருமளவில் பொதுமக்களுக்கும் தொடர்புச் சாதனங்களுக்கும் தெரிவிப்பதற்கு உதவின. வங்கியின் நூலகம் அதன் இருப்பினை உயர்த்தும் வகையில் 1990 இல் 970 நூல்களையும், சிற்றேடுகளையும் மேலதிகமாகச் சேர்த்ததுடன் 502 பருவ வெளியீடுகளுக்கும் கட்டுப்பணம் செலுத்தியது. 1990 இல் பின்வரும் வெளியீடுகள் வங்கியினால் வெளியிடப்பட்டன:—

1. 1989 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு நாணயச் சட்டத்தின் பிரிவு 35 (1) இன் நியதிகளுக்கிணங்க நிதி அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டது.

2. 40 ஆம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்த வெளியீடு. இந்த வெளியீடு மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் மற்றும் கடந்த ஆண்டுகளில் நிறுவன ரீதியாக ஏற்பட்ட பொதுவான அபிவிருத்திகள் என்பன தொடர்பான பல கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது.

3. 1990 இன் முதல் அரைப்பகுதிக்கான பொருளாதார அளவீடு.

4. 1990 ஆம் ஆண்டுக்கான சமூக பொருளாதார தரவு மடிப்பு.

5. உயர் அலுவலர் ஆய்வுகள் தொகுதி 17, எண் 1, 2, தொகுதி 18 எண் 1, 2.

6. வங்கியின் மாதாந்தச் செய்தித் திரட்டு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில்.

7. நிகழ்கால தலைப்புக்களைக் கொண்ட பொருளாதார விடயங்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் மாதம் இருமுறை வெளியிடப்படும் பொருளாதாரச் செய்தித் திரட்டு.

8. மாதாந்த ''சட்டகனவும்'', ''செய்தி அளவீடும்''.

9. இலங்கையின் சமூகப் பொருளாதார பெறுபேறுகள்—1990.

10. இலங்கையின் பொருளாதார சமூகப் புள்ளி விபரங்கள்—1988/89.

11. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தகவல்.

12. சிறப்பு வெளியீடு எண் 20—''மக்களின் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் வங்கித்தொழில் கொள்கைகளை மாற்றியமைத்தல்''.

13. வங்கி புவத்.

வங்கி, தொடர்பூட்டல் சாதனங்களுடனான அதன் நெருங்கிய தொடர்பை வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட பலதரப்பட்ட புதிய செயற்றிட்டங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட அதிகரித்த அளவிலான பத்திரிகை மாநாடுகள் பத்திரிகைகளுக்கான செய்திகள் என்பவற்றின் ஊடாகத் தொடர்ந்தும் பேணி வந்தது. வங்கி பரந்தளவிலான வாசகர் வட்டத்தினை நோக்கிச் செல்வதை இயலச் செய்யும் வகையில் மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனைக்கெனப் பிரபல்யம் பெற்ற புத்தசக் கடைகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி அலுவலகங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தியதனால் விற்பனைப் பீடங்களின் அமைப்பும் அதிகரித்தது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

1990 இல் மத்திய வங்கி அலுவலர்களினால் பின்வரும் ஆராய்ச்சி ஆய்வுகள் முடிக்கப்பட்டன:—

1. சீராக்கம் மற்றும் வளர்ச்சிக்கான நாணயச் சிக்கல்களும் நிதியியல் சீர்திருத்தங்களும்: இலங்கை அனுபவம்.

2. இலங்கை மீதான தனி ஐரோப்பியச் சந்தையின் தாக்கம்.

3. இலங்கையில் நிதியியல் சீர்திருத்தம் 1977—1987.

4. இலங்கை ஏற்றுமதிகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையிலான தொடர்பு—ஒரு செயல்முறைப் பரிசோதனை.

5. இலங்கையில் பணக் கேள்விக்கான பிழை திருத்தங்களின் அணுகுமுறை.

6. இலங்கையில் தனியாள் வருமானவரி தப்பித்தல் பற்றியதொரு மதிப்பீடு.

7. இலங்கையில் முக்கிய பயிர்த்துறைகளில் வளமாக்கிப் பயன்பாட்டின் பொருளாதாரம்.

8. குறுங்கால அரிசி விலைகளுக்கான எதிர்வுகூறல் மாதிரிகள்.

9. பன்னாட்டு மூலதன அசைவுகள்: இலங்கை பற்றிய ஆய்வு.

10. செலாவணி வீத மாற்றங்களும், பணவீக்கம் மீதான அவற்றின் தாக்கமும்.

11. கனனி தொடர்பான நடவடிக்கைகளில் தொழில் உருவாக்கத்தினை ஏற்படுத்துவதற்கான உள்ளார்ந்த வளம்.

12. வெளிநாட்டுக் கடன்களும் வர்த்தக மாற்றுவீத மாற்றங்களும்—இலங்கையின் தாக்கம்.

13. இலங்கையின் ஏற்றுமதிகள் மீதான தாராளமயப்படுத்தப்பட்ட வர்த்தகக் கொள்கையின் தாக்கம்.

14. கொழும்பு போக்குவரத்து முறையிலுள்ள நெருக்கடிகள்.

15. அபிவிருத்திப் பொருளாதாரத்தில் வெளியீடுகளுக்கானதொரு நாணயவியல் மாதிரியும் விலைத் தீர்மானமும்: இலங்கை பற்றிய ஆய்வு.

16. இலங்கையில் தொழிலின்மையின் தன்மையும் தொழிலற்றோரின் எதிர்பார்ப்புக்களும்.

17. இலங்கையில் உண்மைத் தேசிய வருமானத்தில் வர்த்தக மாற்று விகிதத்தின் தாக்கங்கள்.

18. நாணயக் கொள்கையைப் புதுப்பித்தல்—இலங்கை பற்றிய ஆய்வு.

## இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம்

இலங்கை மத்திய வங்கியின் தரவு நிரல்படுத்தல் திணைக்களத்தின் அதிகார வரம்பின் கீழ் இயங்கும் இலங்கைத் தன்னியக்க தீர்வகம் 1990 இல் தனது செயற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தீர்ப்பனவில் எய்தப்பட்ட துரித வேகமானது இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட ஒரு முக்கிய அபிவிருத்தியாகும். ஒவ்வொரு நாளும் பி.ப. 5.00 மணிவரை தீர்வகத்தால் பெறப்பட்ட எல்லாக் காசோலைகளும் அவை வர்த்தக வங்கிகளால் வெளிபிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் வகையில் அதேநாளில் செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டு பி.ப. 10.00 மணிக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன. சில வங்கிகள் தமது விடயங்களை அன்றிரவே சேகரித்தவேளையில் ஏனைய வங்கிகள் அவற்றை மறுநாள் காலை 6.00 மணிக்குச் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. ஒரு நாள் தீர்ப்பனவு நிரலிலுள்ள வங்கிகள்/வங்கிக் கிளைகள் ஆகியவற்றின் திரட்டு மொத்த எண்ணிக்கை 193 ஆக அமையும் வகையில் 48 மேலதிகக் கிளைகள் இதனுள் அடக்கப்பட்டன. காலி மாவட்டம் 3 நாள் தீர்ப்பனவு நிரலுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் வடக்கு கிழக்கிலுள்ள கிளைகள் தவிர்ந்த ஏனைய வெளி மாவட்டங்களிலுள்ள கிளைகள் தற்பொழுது 5 நாள் தீர்ப்பனவு நிரலிலுள்ளன. இலங்கைத் தன்னியக்கத் தீர்வகத்தால் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகள், வங்கி ஆணைகள் என்பவற்றின் மொத்த எண்ணிக்கை 1989 இன் 120 இலட்சத்திலிருந்து (ரூ. 3,670,000 இலட்சம்) 1990 இல் 140 இலட்சத்திற்கு (ரூ. 5,280,000 இலட்சம்) அதிகரித்துள்ளது.

## முகாமைக் கணக்காய்வு

1990 ஆம் ஆண்டில் வங்கியின் முகாமைக் கணக்காய்வுத் திணைக் களம் வங்கியின் பல்வேறு திணைக்களங்களின் நடவடிக்கைகள் தொடர்பாகக் குறிப்பாகச் செயலகம், நலன்புரி, வங்கித்தொழில், நாணயம், கிராமிய வங்கித் தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி ஆகிய திணைக்களங்களையும், களுத் துறையிலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி மற்றும் அதன் கிளைகளையும் கணக்காய்வு செய்தது. கணக்காய்வு நடவடிக்கைகளின்போது வங்கி விதிகளிலும், ஒழுங்கு விதிகளிலும் கூறப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்கி ஒழுகுவது தொடர்பான குறைபாடுகளை வெளிப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தப் பட்டது.

வங்கியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மனிதவலு திட்டமிடல் கூறு வங்கியின் மனிதவலுத் திட்டமிடலில் சில பண்புகள் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித் தது.

## அளவீடுகளும் தரவுச் சேகரிப்பும்

### தேசிய கணக்குகள்

1990 இல் வங்கி தேசிய கணக்கு மதிப்பீடுகளின் தரத்தினை மேலும் முன்னேற்றும்வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்தக் குறிக் கோளிற்கு அமையத் துறை ரீதியான அணுகுமுறையினைப் பயன்படுத்தி மொ.உ.உ./மொ.தே.உ. ஆகியவற்றினை மதிப்பிடுவதற்கான ஒரு முயற்சி மேற் கொள்ளப்பட்டது. இந்தத் துறைரீதியான அணுகுமுறையைப் பயன்படுத்தி, 1988, 1989 ஆகிய ஆண்டுகளுக்கான வீட்டுத்துறை, அரச, வெளிநாட்டுத்துறை என்பவற்றிற்கான மதிப்பீடுகள் 1990 இல் நிறைவு செய்யப்பட்டன.

தேசிய கணக்கின் மதிப்பீடுகளுக்காக இரண்டாந்தர மூலங்களிலிருந்து சேகரி க்கப்படும் தரவுகளிலும் பார்க்க அதிகளவிலான தரவுகளை முதலாந்தர மூலங் களிலிருந்து சேகரிப்பதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய கணக்கு மதிப்பீடுகளின் தரவு மூலத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சாத்தியமான விடயங்களில் காலாண்டு அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப் பட்டன.

### நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை

1978 இல் தொடங்கப்பட்ட நாடளாவிய தரவுச் சேகரிப்புமுறை 1990 இலும் தொடர்ந்து செயற்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் நுகர்வுப்பொருட் களின் சில்லறை விலைகள், பலதரப்பட்ட பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள், நன்கமையாத துறையின் வேளாண்மை நடவடிக்கைகளினதும், சிறிய அளவிலான கட்டுமான நடவடிக்கைகளினதும் நாளாந்தக் கூலிகள் என்பன நாடு முழுவதும் பரந்துள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களிலிருந்து கிரமமான அடிப்படையில் சேகரிக்கப்பட்டன.

**நுகர்வோர் நிதி, சமூகப் பொருளாதார அளவீடுகள் 1986/87**

நுகர்வோர் நிதிகள்——சமூகப் பொருளாதார அளவீடு 1986/87 அறிக்கையின் பகுதி II, 1990 இன் இறுதியில் அச்சிடப்பட்டு முடிவுறுந்தறுவாயில் இருந்தது. இந்த அறிக்கை 1991 இன் முற்பகுதியில் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அறிக்கையின் பகுதி 1 உம் 1990 இல் இறுதியாக்கப் பட்டது.

**வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளும் மக்கள் கடன் முன்னோடித்திட்டங் களும பற்றிய அளவீடு**

மத்திய வங்கி இந்த அளவீட்டினை மாத்தளை, கண்டி, நுவரெலியா கேகாலை ஆகிய மாவட்டங்களில் 1990 ஒத்தோபர் 03 இலிருந்து 1990 ஒத்தோபர் 22 வரையில் நடாத்தியது. மக்கள் முன்னோடிக் கடன் திட்டம் பற்றிய அளவீட்டில் இடைக்கால அறிக்கை 1990 இல் தொகுக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டது.

**இறக்குமதிகளின் கண்காணிப்பு**

கொடுகடன் பத்திரங்கள், கொடுகடன் பத்திரங்களுக்கெதிராகப் பெறப் பட்ட உண்டியல்கள் என்பனவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளினூடாக இறக்குமதிகளைக் கண்காணிக்கும் நடவடிக்கையைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. பாவனையாளர்களுக்கு உரிய காலத்தில் தரவுகளை அளிக்கும் வகையில் 1990 இல் இந்தத் திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## பயிற்சி

கல்வி சார்ந்த கல்வி சாராத நெறிகளில் மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு இலங்கையிலும் வெளிநாட்டிலும் பயிற்சியளித்தல் 1990 இலும் தொடர்ந்தது. கல்வி சார்ந்த பயிற்சிகள் குறிப்பாகப் பொருளாதாரத்திலும் அது தொடர்பான துறைகளிலும் பட்டப்பின்படிப்பு பாடநெறிகளில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட் டுப் பல்கலைக்கழகங்களில் ஒழுங்கு செய்யப்பட்டன. அத்துடன் இது இலங்கையில் நடாத்தப்பட்ட டிப்புளோமா பயிற்சி நெறிகளையும் உள்ளடக்கியிருந்தது. 1990 இல் இரண்டு அலுவலர்கள் முதுமாணிப் பட்டப் பயிற்சி நெறிகளில் பட்டப்பின் படிப்பைத் தொடர்வதற்காக வெளிநாட்டிற்குப் பயணமானார்கள். இவ்வாண் டில் பதினொரு அலுவலர்கள் முதுமாணிப் பட்டப் பயிற்சி நெறிகளையும், நான்கு அலுவலர்கள் முனைவர் பட்டங்களுக்கான பாடநெறிகளையும் வெளி நாட்டில் தொடர்ந்தனர். ஆய்விற்குட்பட்ட இவ்வாண்டில் நான்கு அலுவலர்கள் முதுமாணிப் பட்டப் பயிற்சி நெறியினையும் ஒருவர் முனைவர் பட்டப் படிப்பினையும் பூர்த்தி செய்துவிட்டு நாடு திரும்பினார்கள்.

நீண்டகால, குறுங்காலப் பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், வேலைத் தலங்கள், கல்விச் சுற்றுலாப் பார்வையிடல் ஆகிய வடிவிலான கல்வி சாராத பயிற்சிகளும் வங்கிக்குப் பயனுள்ள துறைகளில் வெளிநாட்டு நிறுவனங்களில் ஒழுங்கு செய்யப்பட்டன. இரு அலுவலர்கள் புள்ளிவிபரவியல் துறையில் நீண்ட காலப் பயிற்சி நெறிகளைத் தொடர்ந்தனர். 1990 ஆம் ஆண்டில் எல்லாமாக 70 அலுவலர்கள் குறுங்காலப் பயிற்சிக்காக வெளிநாட்டிற்குப் பயணமானார்கள். குறுங்காலப் பயிற்சிக்கென வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட இந்த அலுவலர் களுக்குப் புறம்பாக மொத்தமாக, 193 அலுவலர்கள் இலங்கையிலுள்ள பல தரப்பட்ட நிறுவனங்களில் நடாத்தப்பட்ட பயிற்சிச் செயற்றிட்டங்களில் பங்கு பற்றியவேளையில் 93 அலுவலர்கள் மத்திய வங்கியின் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பங்கு பற்றினர்.

1989 இன் பிற்பகுதியில் தொடங்கிய கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ''வெளிநாட்டுப் படிப்பிற்கான ஆங்கிலம்'' என்ற நெறி, முத லாவது நெறியில் அலுவலர்களின் செயலாற்றம் உயர்ந்த தரம் கொண்டது என கருதப்பட்டவர்களுக்கான பின்தொடர் நெறியுடன் 1990 இலும் தொடர்ந்தது. இந்தப் பின்தொடர் நெறியில் மொத்தமாக 28 அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

எதிர்காலத்தில் பட்டப்பின் படிப்பிற்காக வெளிநாடு செல்வதற்கு ஆர்வங் கொண்டுள்ள அலுவலர்களுக்காகத் தொடரான கருத்தரங்குகளும் ஒழுங்கு செய் யப்பட்டன. இந்தக் கருத்தரங்குகள் வங்கியின் மூத்த அலுவலர்களினால் பட்டப் பின்படிப்பு மாணவர்களுக்குப் பயனுள்ளதெனக் கருதப்பட்ட தலைப்புக்களில் நடாத்தப்பட்டன.

## ஆளணி

ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணாதிலக 1990 ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும், கூட்டங்களிலும் கலந்துகொண்டார்:—

1. ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றின் ஆளுநர்கள் சபைகளின் இடைக்காலக் குழுக் கூட்டம்.
2. தெகிரானில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 18 ஆவது ஆளுநர்கள் சபைக் கூட்டம்.
3. இலண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் ஆண்டுக் கூட்டம்.
4. ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற பொதுநலவாய நிதியமைச்சர் களின் கூட்டமும் பன்னாட்டு நாணய நிதியம்/உலக வங்கி என்பன வற்றின் ஆண்டுக் கூட்டங்களும்.

5. மலேசியாவிலுள்ள தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய வங்கிகள் நிலையத்திற்கும் கோலாலம்பூரிலும் தாக்காவிலும் நடைபெற்ற தெற்காசிய பிரதேச மாநாட்டின்பின் பன்னாட்டு அபிவிருத்திக்கான சமூகத்திற்கும் சென்றார்.

6. இந்தியாவில் நடைபெற்ற சியென்சா ஆளுநர்களின் கூட்டமும் கருந்தரங்கும்.

ஆளுநர் இலங்கையில் இல்லாத காலத்தில் துணை ஆளுநர் முனைவர் எஸ். ரீ. ஜீ. பர்னாந்து மூத்த துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

திறைசேரித் துணைச் செயலாளர் திரு. எச். பி. திசாநாயக்கா நிதி அமைச்சின் செயலாளர் இல்லாத காலத்தில் நிதி அமைச்சரின் மாற்றுச் செயலாளராக நாணயச் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

**நியமனங்கள்**

நிறுவனத் துணைப் பணிப்பாளர் திரு. கே. ஜீ. தர்மசேன 1990 சனவரி 1 இலிருந்து அபிவிருத்தி நிதிப் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார். இவர் 1990 ஒத்தோபர் 08 இலிருந்து நிறுவனப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

துணை முதன்மைக் கணக்காளர் திரு. கே. சி. எம். குணசேகர 1990 சனவரி 1 இலிருந்து ஊழியர் சேமநிதிய பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

செலாவணிப் பதில் கட்டுப்பாட்டாளர் திரு. டி. எல். ஜெயமான்ன 1990 சனவரி 1 இலிருந்து பதில் மேலதிகச் செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

**விடுவிப்பில் உள்ள அலுவலர்கள் (1990 திசெம்பர் 31இல் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள், இலங்கையில் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிற்கும், பன்னாட்டு அமைப்புக்களுடன் செயற்படுவதற்குமாக விடுவிக்கப்பட்டனர்:—

திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன செயலாளராகக் கடமையாற்றுவதற்காகக் கைத்தொழில் அமைச்சிற்கு.

முனைவர் என். ஈ. எச். சந்தரத்ன நிதியமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து வங்காள தேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காகப் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

திரு. பி. எம். நாகவத்தை வீடமைப்பு, கட்டுமான அமைச்சின் கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக வீடமைப்பு, கட்டுமான அமைச்சிற்கு.

திரு. கே. பீ. தொடங்கொல்லாகம ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடமையாற்றுவதற்காகக் கைத்தொழில், அறிவியல், தொழிநுட்ப அமைச்சிற்கு.

திருவாளர்கள் டி. எஸ். ஐ. ஏ. ஆரியதாச, சி. லியனகே, டபிள்யூ. ஏ. டி. ஈ. வீரசிங்க, என். எம். தயாரத்ன, செல்வி கே. சரவணமுத்து ஆகியோர் நிதியமைச்சிற்கு.

திரு. எஸ். எம். ஏ. சிறிவர்த்தன மாவட்ட செயற்றிட்ட இணைப்பாளராக தொழிற்படுவதற்காகப் புத்தள மாவட்ட சிறு வேளாண்மையாளர், நிலமற்றோர் செயற்றிட்டத்திற்கு.

திருவாளர்கள் டபிள்யூ. ஏ. விஜயவர்த்தன, என். எம். ஜெயசேகர, திருமதி ஏ. எல். பிரேமசந்திர ஆகியோர் இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகத்திற்கு.

**ஓய்வு பெறல்—பதவி விலகல்**

முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலக துணை ஆளுநர் 1990 சனவரி 4 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. யூ. ஏ. த சில்வா நிறைவேற்றுப் பணிப்பாளர் 1990 ஏப்பிறல் 19 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. டீ. கே. ஜயவர்த்தன, நிறைவேற்றுப் பணிப்பாளர் 1990 நவெம்பர் 30 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. ஜீ. டி. பீ. முனிதாச, கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம் 1990 பெப்புருவரி 14 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. ஈ. டபிள்யூ. ஈ. விஜேதுங்க, மேலதிகக் கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம் 1990 பெப்புருவரி 06 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

முனைவர் ஜி. எம். அபயரட்ன உயர் அலுவலர் வகுப்பு 4, 1990 செத்தெம்பர் 1 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து விலகிக் கொண்டார்.